

அவனும்...
அதுவும்...
மாயன்...

காயங்கள் ...

# அவளும் ...
# அழவும்..

"இல்லை .. இல்லவேயில்லை .. என் குழந்தை அருகில் வர நான் விலி கொள்வேனா? ..

வாரி அணைக்கும் போது விச நாக்காய் விழுங்கி விடுவேனா?

நான்... நான்..."

சிறுகதைகள்

மாயனின் ...

# அவளும் ...
# அதுவும்...

“இல்லை .. இல்லவேயில்லை .. என் குழந்தை அருகில் வர நான் கிலி கொள்வேனா? ..

வாரி அணைக்கும் போது விச நாக்கால் விழுங்கி விடுவேனா?

நான்... நான்...”

சிறுகதைகள்


பதிப்பு விபரம்:

| | |
|---|---|
| தலைப்பு | : அவனும்.... அதுவும்.... |
| எழுத்தாளன் | : மாயன் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் |
| பதிப்பு | : மாசி 05 நந்தன வருடம் 2013 (பெப்புரவரி 17, 2013) |
| பதிப்புரிமை | : சரளா ஸ்ரீஞானேஸ்வரன் |
| வெளியீடு | : கலை, கலாசார அபிவிருத்தி அமையம் இல. 159A, கடல் முக வீதி, திருக்கோணமலை |
| கணனி வடிவமைப்பு | : ச. லக்ஸ்மன் |
| அட்டைப்பட வடிவமைப்பு | : ச. லக்ஸ்மன் |
| அட்டைப்படப் படங்கள் | : ச. அர்ஜுன் |
| அச்சு பதிப்பு | : எஸ்.எஸ். டிஜிட்டல்ஸ், 58, வித்தியாலயம் வீதி திருக்கோணமலை |
| விலை | : 200.00 (இலங்கை ரூபாய்கள்) |
| முன் அட்டைப் படத்தில் | : அரங்காலயாவின் எஸ். துஜன் (முரண் நாடகம்) |

ISBN - 978-955-44132-0-7

| | |
|---|---|
| Title | : Avanum... Athuvum... (Short Stories) |
| Launched | : February 17, 2013 |
| Writer | : Maayan Ra. Shrignaneswaran |
| Published by | : Centre for Art Culture and Development No.159A, Sea View Road, Trincomalee. |
| Copyright | : Mrs. Sarala Shrignaneswaran |
| Layout & Design | : S.Luxman |
| Printing | : SS Digital's, No. 58, Vidyalayam Road, Trincomalee |
| Price | : SLRs. 200.00 |

# அர்ப்பணம்



திரு. செ. விந்தன் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

சிற்பிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். சிலைகளை அவர்கள் செதுக்குபவர்கள்... காய்ப்பேறிய கைகளில் உளிகளை அவர்கள் இறுக்கிப் பிடித்து கருங்கற்களைப் பொழிந்து...பொழிந்து... கண்ணுங்கருத்துமாய் அவர்கள் சிலைகளைச் செதுக்குவார்கள்... சிலவேளைகளில் சிலைகளில் முரண்படும் உளிகள் தெறித்துச் செய்யும் காயங்களால் சிற்பிகள் தம் செந்நீரை மண்ணிற் சிந்தியதும் உண்டாம்... எனினும் அவர்கள் செதுக்கிய சிலைகள் ஆயிரங்காலம் மண்ணில் வாழும்... சிற்பிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன்....

இந்த மனிதச் சிற்பியால்த்தான் மாயனும் செதுக்கப்பட்டான். அவரின் காய்ப்பேறிய கைகளுக்கும் எமக்காய் ஊற்றிய செந்நீருக்கும் அர்ப்பணம்!

## நன்றி

முகவுரை வரைந்த மூத்த எழுத்தாளர் தாமரைச்செல்வி (திருமதி .கந்தசாமி ரதிதேவி) அவர்களுக்கு!

இத் தொகுதியை வடிவமைத்து அழகாக உங்கள் கைகளுக்கு வாசிக்கத் தந்த எஸ்.எஸ். டிஜிட்டல்ஸ் நிறுவன உரிமையாளர்கள் லக்ஸ்மன் மற்றும் அர்ஜுன் இருவருக்கும்!

எப்போதுமே எனது முயற்சிகளுக்குத் துணையாகவிருக்கும் துணைவி திருமதி. சரளாவிற்கு!

- இந்தப் புத்தகத்தின் விற்பனையின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து 1/3 பங்கு திருக்கோணமலையில் இலவசக் கல்விச் சேவைகளுக்காக திருக்கோணமலை நகர லியோ கழகத்தினருக்கும், வன்னி பாடசாலைகளின் நூலக நிதியத்துக்கும் உரித்தாகின்றது.-

3324

## முன்னுரை



ஈழத்து இலக்கிய உலகில் தடம் பதிக்கும் இளம் தலைமுறை எழுத்தாளரில் ஒருவராக தன்னை அடையாளம் காட்டும் 'மாயன்' அவர்களின் புதிய பதிவாக வெளிவரும் சிறுகதைத் தொகுதி "அவனும் அதுவும்".

மாயன் ஏற்கனவே பத்திரிகைத் துறையில் தனது பங்களிப்பைச் செய்து வருபவர். இலக்கியத் துறையின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் 2012 ஜுலையிலிருந்து திருக்கோணமலையில் இருந்து வெளிவரும் 'மலைமுரசு' பத்திரிகையின் ஆசிரியருமாவார். 1999 இலிருந்து 2012 வரை தான் எழுதிய எட்டு சிறுகதைகளை இந்நூலில் சரங்களாக தொகுத்து தந்திருக்கிறார்.

சக மனிதர்களை நேசிக்கும் தன்மையும் சமூகத்தில் நடக்கும் அவலங்களை கண்டு கலங்கும் தன்மையும் ஒரு படைப்பாளிக்கு உள்ள இயல்பான குணங்கள்.

சுற்றிலும் நடப்பவற்றைப் பார்க்கும் போது எழுகின்ற மனநெருடல்கள் தான் இலக்கியமாக பலவடிவங்களிலும் பிறப்பெடுக்கிறது. அப்படி ஒரு மனநெருடலில் எழுந்த சிறுகதைகளாக இத்தொகுப்பிலுள்ள கதைகளை நாம் நோக்கலாம். மனித இருப்பின் சவால்களும் நெருக்கடிகளும் அவற்றை மனிதர் எதிர்கொள்ளும் விதங்களும் இங்கேயுள்ள எட்டுக் கதைகளிலும் அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. சமூக அக்கறையுள்ள ஒரு படைப்பாளியின் பார்வையில் இச்சமூகமும் மனிதர்களும் எப்படி எப்படியெல்லாம் அடையாளம் காட்டப்படுகிறார்கள் என்பதை இக்கதைகளைப் படிக்கும் போது எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு சிறுகதையின் உருவம், உள்ளடக்கம் பற்றி பல்வேறு விமர்சனங்கள் எழுவதுண்டு. அவை எந்த விதமாக அமைந்திருந்தாலும் ஒரு கதையை படித்து முடிந்ததும் வாசகர் மனதில் எஞ்சி நிற்கும் நினைவு அல்லது உணர்வின் தாக்கமே அச்சிறுகதையின் தரத்தை தீர்மானிக்கவல்லது என்பதே உண்மையானது.

அந்த விதத்தில் இத்தொகுப்பிலுள்ள எட்டுக் கதைகளுமே வெவ்வேறு விதமான தாக்கத்தை .... அதிர்வை மனதுக்குள் ஏற்படுத்துகிறது. இத்தொகுதியில் "அவனும் அதுவும்", "ஒரு புயலின் பிறப்பு", "நசுங்கள்", "நிறங்களற்ற கனவுகள்", "ஊமையின் பாடல்", "சபிக்கப்பட்ட நாயின் சாவு", "பரிநிர்வாணம்", "அஞ்ஞாதவாசம்" ஆகிய எட்டு கதைகள் தொகுக்கப்பட்டிருக்கிறது.

எந்த இலக்கிய வடிவத்திற்கும் மொழிதான் பிரதானமாக அமைகிறது. ஒரு படைப்பின் வெற்றிக்கு மொழிநடையே பெரும் பங்கு வகிக்கின்றது. இலக்கிய வடிவங்களில் குறிப்பாக சிறுகதைக்கு ஒரு தனியான மொழிநடை அவசியமாகிறது. மாயனின் சிறுகதைகளில் இந்த மொழிநடை மிகச்சிறப்பாக கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். மனஉணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்ட இக்கதைகளில் வறுமை, உளச்சோர்வு, இயலாத்தனம், மனிதாபிமானம், இழப்பின் துயரம் போன்ற பல்வேறு பிரச்சனைகள் எடுத்தாளப்படுகின்றன. சில கதைகள் மனதுக்குள் அசைவையும் சில கதைகள் அதிர்வையும் ஏற்படுத்துகின்றன.

ஒரு புயலின் பிறப்பு கதையில் வரும் சிறுவன் எம் மண்ணில் வாழும் எத்தனையோ மனிதர்களின் பிரதிநிதி. ஒரு நிகழ்வின் துயரத்திலிருந்து மீள்வதற்காய் அவன் சிந்திக்கும் விதம் இயல்பாய் சொல்லப்பட்டிருக்கிறது.

நிறங்களற்ற கனவுகள் யதார்த்தவாதத்தை பிரதிபலிக்கும் நல்ல சிறுகதை. தன்னுடைய ஆசைகளை தன் குடும்பத்தினரின் தேவைக்காக கலைத்துப் போடும் ராமின் தியாக மனம் இங்கு அடையாளம் காட்டப்படுகிறது. நாம் அன்றாடம் தரிசிக்கும் மனிதர்கள் இதில் பாத்திரங்களாக உலா வருகின்றனர்.

ஒரு தனி மனிதனின் இயல்பு... தன்னைச் சுற்றியுள்ளவர்களை அவன் பார்க்கும் விதம், அதனால் ஏற்படும் சங்கடங்கள், துயரங்கள் என சொல்லப்பட்ட கதைகள் நசுங்கள், அஞ்ஞாதவாசம், ஊமையின் பாடல். சுமக்கமுடியாத அளவு துயரங்களை சுமந்த மனம் எடுக்கும் முடிவை நசுங்கள் கதையிலும், தீராத வெறுப்புக்களான அப்பா இறந்ததை விடுதலை உணர்வாய் உணரும் மனதை அஞ்ஞாதவாசம் கதையிலும் தரிசிக்கலாம்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பதற்கிணங்க வாழ வழியில்லாததால் ஒரு பெண் எடுக்கும் முடிவை சொல்வது பரிநிர்வாணம் கதை. எதிர்காலமே கேள்விக்குறியான நிலையில் அவள் மன உணர்வுகளும் புதிய முறையில் புதிய உத்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதைக்கு பலவிதமான மாற்று விமர்சனங்கள் எழக்கூடும்.

இத்தொகுப்பில் மனதை அதிகம் நெகிழ வைத்த கதைகளாக சபிக்கப்பட்ட நாயின் சாவு, அவனும் அதுவும் எனும் இரண்டையும் குறிப்பிடலாம்.

பொத்தி பொத்தி வளர்த்த பிள்ளை சுடப்பட்ட நிலையில் குப்பை மேட்டில் வீசியெறியப்பட்ட பரிதாப நிகழ்வை நெகிழ்ச்சியோடு சொல்லும் கதை சபிக்கப்பட்ட நாயின் சாவு. இப்படி எத்தனை நிகழ்வுகள். . . எத்தனை மரணங்கள். . . இன்னும் இலக்கியங்களில் பதிந்து போன வரலாறாய்...

செதுக்கி செதுக்கி எழுதப்பட்ட எழுத்துநடை கதைக்கு கூடுதல் கனதியைத் தருகிறது. பாத்திரங்களுடனேயே நாமும் பயணிப்பதைப்போல...

இத்தொகுப்பின் மகுடக்கதையான அவனும் அதுவும் தனிக் கவனிப்பு பெறுகிறது. எடுத்துக் கொண்ட கருவாலும் உருவ அமைப்பாலும் கதை சொல்லும் முறையாலும் சிறப்பு பெறுகின்ற சிறுகதை. இன மத மொழி கடந்து உலகத்திலுள்ள அத்தனை மனிதர்களுக்கும் பொருந்துவதாய் அமைந்த கதை. இதில் பேசப்படுவது வன்செயலின் கொடுமை அதன் விளைவு எத்தனை துயரம் மிகுந்தது என்பதை இயல்பான நடையில் சிறுசிறு வசனங்கள் மூலம் மனதில் பதியச் செய்திருக்கிறார்.

இந்த எட்டு கதைகளிலும் கையாளப்பட்டிருக்கும் கருக்கள் நாம் அன்றாடம் அயலவர் வாழ்வில் காண நேர்பவைதான். சமூகம் எங்கும் பரவிக் கிடப்பவைதான். ஆனால் அவைகளை 'மாயன்' அவர்கள் உருவாக்கித் தந்தவிதம் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது.
தான் சொல்ல விரும்பியவற்றை சொல்வதற்கு இவருக்கு சரளமான மொழிநடை கை கொடுத்திருக்கிறது. மனதோடு பேசும் தன்மை கொண்ட மொழிநடை கதையோடு எம்மை ஒன்றிப்போகச் செய்கிறது. நல்ல வாசிப்பு அனுபவத்தை தருகிறது.
நம் சமூகத்தின் அதிர்வுகளை சுமந்து நிற்கும் இச்சிறுகதைத் தொகுப்பு ஈழத்து இலக்கிய உலகில் தன்னை ஒரு தரமான வரவாக பதிவு செய்து கொள்கிறது.

"தாமரைச் செல்வி"

## மனப்பதிவு!

சுமார் 20 வருடங்களுக்கு முன், 1992-93களில் எனது சிறுகதைகள் அடங்கிய புத்தகமொன்றை வெளியிடும் முயற்சியொன்றில் நண்பன் சத்தியானந்தனும் நானும் ஈடுபட்டிருந்தோம். அந்த முயற்சிக்கு நிதியுதவியளித்தது எமது பாடசாலை வகுப்புத் தோழன் திரு. திருக்குமார் (நெல் ஆலை உரிமையாளன், திருவையாறு முதலாம் வட்டாரம், கிளிநொச்சி). அக்காலத்திலேயே ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய்களை ஆரம்ப அன்பளிப்பாக திருக்குமார் எம்மிடம் கையளித்திருந்தான். கைவசம் சிறுகதைகளும் நிறையவே இருந்தன. எனினும் ஏனோ அந் நோக்கம் நிறைவுறாமலே போயிற்று. இன்னும் திருக்குமாரிடம் கடன்பட்டவனாகவே இருக்கின்றேன்.

எனது சிறுகதைகளைப் புத்தகமாகப் பதியவேண்டிய விருப்பம் எனக்கு ஏற்பட்ட இன்றைய காலத்தில் புத்தகமொன்றை வெளியிடுவோம் என்ற எண்ணம் உருப்பெற்ற வேளை என்னிடமிருந்த சிறுகதைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்ட போது இரண்டு விடயங்கள் என்னைச் சுட்டன. முதலாவது வன்னியின் மூன்று இடப் பெயர்வுகளின் போதும் நான் தொலைத்தவற்றில் மீளவரைய முடியாத எனது சிறுகதைகளும் அழிந்து போயிருந்தன. இரண்டாவது என் சோம்பேறித்தனத்தால் சிறுகதைகளை வரையாது கவிதைகளை வரைந்திருந்ததால் சிறுகதைகளின் எண்ணிக்கை ஓரிலக்கங்களுக்குள்ளேயே இருந்தது.

எனினும் புத்தியைச் சுட்ட இவ்விரு விடயங்களையும் தாண்டி எனது எட்டுச் சிறுகதைகளை கொண்ட முதலாவது தொகுதி இன்று 17.02.2013ல் வெளியாகின்றது. இனிச் சிறுகதைகளை வடிப்பதில் ஓய்வதில்லை. எனினும் சிலவேளைகளில் ஆண்டிற்கு ஒரு சிறுகதையை மட்டுமே வடிக்க முடிவதாயிருக்கலாம். யார் கண்டார்?

அற்புதமான விமர்சனம் ஒன்றைச் செய்து இப்புத்தகத்தில் சிலவேளைகளில் வரலாற்றுத் தவறாகப் போயிருக்கக்கூடிய விடயமொன்றை என்னுடன் விவாதித்துத் திருத்திய மூத்த எழுத்தாளர் தாமரைச்செல்விக்கு எனது நன்றி. எனது முதலாவது புத்தகத்திற்கு அவரது முகவுரை கிடைத்ததையிட்டுப் பெருமைகொள்கின்றேன்.

மற்றொரு புத்தகத்தில் சந்திப்போம்..

அன்புடன்
மாயன்

அவனும்... அதுவும்...

ஒரு புயலின் பிறப்பு

**நசுங்கல்**

நிறங்களற்ற கனவுகள்

ஊமையின் பாடல்

சபிக்கப்பட்ட நாயின் சாவு . . .

பரிநிர்வாணம்...

அஞ்ஞாதவாசம்

# அவனும்... அதுவும்...

என்ன இது... என்றுமேயில்லாதவாறு கருமை பூத்துக் கிடக்கிறது இரவு....

எழும் எந்த ஒரு சிறு ஒலியும் எனக்கு அகோரமானதாய்க் கேட்கும். அதுவே ஒரு பயப்பீதியையும் என்னுள் உருவாக்கும்....

'என்று இந்தத் தேசத்தின் எல்லையில் காலடி வைத்தேனோ அன்றிலிருந்து மரித்துப்போன நாட்களின் மணித்தியாலங்களில் எல்லாம் நான் மனிதன்' என்பதை மறந்து போனேன்.

நண்பன் ஒருவனை இழப்பதும்.. இரத்தத்திற் குளிப்பதும்.. எதிர்படும் அப்பாவிகளைச் சுட்டு வீழ்த்துவதும்...

நகக்கண்ணில் இரத்தக்கறையுடன் உணவுண்பதும்... சீருடைகள் உடற்றோலானதும்...

இப்படி ஒவ்வொன்றும் நான் மனிதன் இல்லை என்பதை என்னில் வலியுறுத்திற்று.
வியட்நாமின் அடர்ந்த இருள் சூழ்ந்த இக்காடுகளுள்... நானும்... ஐந்தறிவும்... ஆயுதமும் கொண்டு...

அதுவும் என்னை உணர்ந்து கொண்ட ஒரு நல்ல நண்பனாய்.... சோகத்தில் தலை கவிழும் போது எனது சப்பாத்து முனையில் தலையைப் பொருத்திக் கொள்ளும்.
நான் சண்டையிடும் போது அதுவும் ஆக்ரோசமாய் சடசடத்து...
தூங்கும் போது என் உடலின் மீது சரிந்து.. எப்போதும் ஒரு நல்ல நண்பனாய்...
அதை உற்று நான் உணரும் போதெல்லாம் என்னுள் ஒரு வினா எழும்....

நீயும் காதலித்துள்ளாயா? என...
அதன் முகத்தை நான் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருப்பேன்...
எப்போதுமே அது பதில் சொல்லியதில்லை... ஆனால் நான் சொல்லியிருக்கின்றேன் என் காதலைப் பற்றி...

றீட்டா... இப்போதெல்லாம் நான் அடிக்கடி நினைப்பதுண்டு... அவளைக் காதலித்தது தவறோ என்று..
அவள்...

அவள் அமெரிக்காவின் இயந்திரத்தனத்திலிருந்து இளமையின் இனிமையை எனக்காய்ப் பிரசவித்தவள்...

"ஏய் ஜேம்ஸ் இந்தச் சட்டை வடிவா?"
"உனக்கு எந்தச் சட்டையும் வடிவு."
"போடா முட்டாள் எல்லா லவர்சும் இப்பிடித்தான் ஒரே பொய் சொல்லுவானுகள்"
"உனக்கு என்னெண்டு தெரியும் றீட்டா? எல்லா லவர்சும் இப்பிடித்தான் எண்டு? நீ எத்தனை பேரை லவ் பண்ணினாய்?"

நான் சீண்டும் போது அவள் கோபத்தால் சிவப்பதை.. நான் தீண்டும் போது அவள் மோகத்தில் சிலிர்ப்பதை...

ஒரு சிவந்த ரோஜாவின் இதழ்களை வருடியபடி... "ஜேம்ஸ் எனக்கு போட்டிங் போறது நல்ல விருப்பம்டா"
"எனக்கும் தான்!"
"என்னது?"
"டேட்டிங் போறது."
"ஏனிப்பிடி அலையிறாய் இன்டைக்கு நாங்கள் போட்டிங் போவோம், ஓ.கே?"

மெதுவாய்... மிக மெதுவாய் என் இதழை... அவள் இதழுடன் அழுத்திச் சேர்ப்பேன்.
அவள் கழுத்தை என் கரங்களால் வளைத்தபடி..
"என்ன போட்டிங்கில்... டேட்டிங்கா"
என்ற அவள் ஜோக்குகளை...

ஆடம்பரங்கள் எதுவுமின்றி... அவள் நானானதை... நான் அவளானதை... தன்னுள் என்னைச் சுமக்கத் தொடங்கிய அந்த இரண்டு மாதச்

செழுமையை...
எல்லாம்.... எல்லாவற்றையும்... நான் சொல்லச் சொல்ல
அது... அது கேட்டுக்கொண்டேயிருக்கும்...
அவளுடனான அந்த நினைவுகள் என் இதயத்தில் கனத்துக் கொண்டேயிருந்தது. பிரித்து வாசிக்க முடியாமல் சீருடைப் பொக்கற்றுள் கிடக்கும் கடந்த வாரம் வந்த அவள் கடிதத்தைப் போல...

சரக், சரசரக்.....
சத்தம் வந்த திசையை நோக்கி என்னுடலின் ஒவ்வொரு செல்லும் ஆயிரம் கண்கொண்டு நோக்கும், அது என் கைகளில் நிமிர்ந்தது ஆக்ரோசமாய்.
"ஜேம்ஸ்... ஜேம்ஸ்"
அது மார்டினின் குரல்
"ஓம்"
"நீ போய் நித்திரயக் கொள்... இனி என்ர டியூட்டி.... விடிய இன்னும் கொஞ்ச நேரம் தான் கிடக்கு"
கர்ண கடூரமாய்... பெயரறியா ஒரு பறவையின் ஒலியாய்.... எமக்கு மட்டுமே புரியக்கூடிய கட்டளையாய்....
பிளட்டூன் கமாண்டரின் விசில்...
"அட்டென்சன்"
விரிந்து கிடந்த வரைபடமும் விசிலும் என்னுள் எதையோ உணர்த்திற்று...
" க்கும்.. எல்லோரும் சொல்வதைக் கேளுங்கள்... அருகிலுள்ள வியட்நாமியக் கிராமமொன்றை முற்றுகையிடப் போகின்றோம்."
"....................."
" அங்கு எதிரி யாரெனப் பிரித்தறிய முடியாதுவிடில் அனைவரையும் கொல்வதே சாலச் சிறந்தது....."

மார்டினின் தலைமையில் நாம் சிலர் மிக மிகக் கவனமாய் முன்னேறிக் கொண்டிருந்தோம். மெதுவாய்..தரையில் ஊர்ந்து...
மார்டினிடமிருந்து சடுதியான உத்தரவு
"நிலையெடுங்கள்"

கிராமம் தெட்டத் தெளிவாய்த் தெரிந்தது...
ஆயுதம் தாங்கிய ஓரிருவரின் அசைவும்... மெல்லிய அழுகுரல்களும்

இனி யுத்தமின்றி முன்னேறிச் செல்ல முடியாது... சடுதியான தாக்குதலே சரியென மனஞ் சொல்லிற்று... அதுவே மார்டினிடமிருந்து உத்தரவாயும்.

அக் கணப்பொழுதிலிருந்து.. நான் அதுவாய்... அது நானாய்.. அது என்னின் இதயத் துடிப்பாய்..
லப்... டப் லப்... டப் லப்... டப் லப்... டப்...
டட்... டட்... டட் டட்... டட் டட் டட்... டட் டட்

விடுதி ஒன்றின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தது அது..
குவிந்து கிடந்த வைக்கோற் போரினுள் உக்கிப் போன உடலும் உடையும் கொண்டு வியட்நாமிய சிறுமி.. .. ..
அவள் தாய் மொழியில் ஏதோ ஏதோ எல்லாம் உளறியபடி..
அவள் மொழி புரியவில்லை எனினும் உயிர்வாழும் நம்பிக்கையின் ஒலியென அது புரிந்து கொண்டது.
அது அவளை உற்று நோக்கிற்று.. மிகச் சாந்தமான ஒரு நட்புடன்.. பூச்சி அருகில் வரும்வரை நட்புடனிருக்கும் விச நாக்குக் கொண்ட பல்லியாய்..
சிறுமி கைகளிரண்டையும் உயர்த்தியபடி எழ
அது கிலி கொண்டது..
அவளது ஒவ்வொரு அசைவும் தனக்கான பொறியென தப்பார்ப்பிதம் செய்தது...
ஏனோ தாய் நாட்டையும் தன் அழகிய மனைவியையும் நினைத்துக்கொண்டது.
சிறுமியின் கனவுகள்.. ஆசைகள்.. உயிர் வாழும் நம்பிக்கைகள்.. எல்லாம்.. எல்லாம் அவள் விழிகளினூடே தெறித்துவிழ...

அவளைச் சுட்டுக் கொன்றது.

"நல்ல வேலை... நல்ல வேலை..." பிளட்டுன் கமாண்டர் பாராட்டிக் கொண்டேயிருந்தார்.
"இன்றைய ஒப்பரேசனில் பங்குபற்றிய எல்லோருக்கும் நான்கு மணிநேர ஓய்வு... போங்கள்... போய்ச்சந்தோசமா இருங்கள் "

ஓட்டமும் நடையுமாக என் ஓய்விடத்திற்குச் சென்று அதை என் தோள்களிலிருந்து நீக்கினேன். மெல்லிய புன்னகையுடன் ஒரு முத்தம்

கொடுத்து சுவரில் சாத்தினேன்.

தட்டிலிருந்த ஒரு இறைச்சித்துண்டை வாயில் போட்டு சவைத்துக் கொண்டு பொக்கற்றுக்குள் கையைவிட்டு கசங்கிக் கிடந்த றீட்டாவின் கடிதத்தை எடுத்தேன்...

"அன்பே, நலமா?

மிக நீண்ட தூரத்திலிருப்பினும் உங்களுடன் என் நினைவுகளுமிருக்கும் என்றே நினைக்கின்றேன்... உங்கள் இருப்பை உறுதி செய்ய என்றும் கர்த்தரை வேண்டுவேன்.

அன்பே, உங்கள் வரவிற்காய் நான் மட்டும் காத்திருப்பதாய் எண்ணல் வேண்டாம். போன வாரம் பிறந்த உங்கள் மகளும்..."

என்னுள் ஏதோ ஒன்று உடைந்தது... எனக்கு மகளா கடவுளே... இல்லை.....

"மெல்லிய நூலாடையில் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அந்த ஏழைச்சிறுமி போல..."

இல்லை... றீட்டா... இல்லை

"அவளது மொழியும் எனக்குப் புரிவதில்லை.. அன்பே, எனினும் அவள் உயிர் வாழும் நம்பிக்கையுடன் என் முலைக்காம்பை இறுகப் பற்றிக்கொள்கிறாள்... மேலும்..."

இல்லை... இல்லவேயில்லை... என் குழந்தை அருகில் வர நான் கிலி கொள்வேனா?... வாரி அணைக்கும் போது விச நாக்கால் விழுங்கி விடுவேனா?

நான்... நான்...

சுவரோரம் சாய்ந்திருந்த அதைப் பார்க்கிறேன்...கறுத்து நீண்ட.... ஏதோ ஒன்றாய்... காலனின் கயிறாய்... விசப் பாம்பாய்... இன்னும் என்னென்னவோவாய்... அது... அது என்னை விழுங்க வருவதாய்... ஐயோ... இல்லை.... இல்லவேயில்லை

ஜேம்ஸின் அழுகுரல் வியட்நாமியக் காடெங்கிலும் எதிரொலித்தது. அவன் ஏன் அழுகிறான் என்பதை புரியாத நண்பர்கள் அவனைச் சுற்றி நின்றார்கள்.

அது அனாதரவாய் சுவரோரமே கிடந்தது....

- 1999ன் சுதந்திர இலக்கியச் சிறுகதைச் சான்றிதழ் பரிசு-

# ஒரு புயலின் பிறப்பு

"ஐயோ போயிட்டிங்களா..... ஐயோ.......யோ"

மிகவும் மெதுவாய் ஆரம்பித்து, உலகின் அந்தத்தில் எங்கோ ஒழிந்துள்ள அந்த உடலினைப் பிரிந்த உயிரின் காதுகளை எட்டும் நோக்கம் கொண்டு... ஒலிக்கும் அழுகுரல்...

"என்ர ராசா மோனே எனக்கு முதல்லியே போயிட்டியாடா... எனக்குக் கொள்ளி வைப்பாயெண்டு இருந்தேனே... ஐயா... உன்ர கொள்ளியையெல்லோ நான் பாக்க வேண்டிக் கிடக்கு..."

" ஐயோ... ஐயோ... ஐயோ..."

ஒரு கூட்டமாய்ப் பெண்களின் அழுகுரல்... ஒலிப்பதுவும்... ஒருகணப்பொழுது குறைவதும்... மீண்டும் ஓங்கி உலகின் அந்தம் நோக்கி.... " ஐயோ...."

"என்னடாப்பா... நேற்றுப்பின்னேரமும் வீட்டு வாசலில இருந்து ஊர் நிலவரம் பற்றிக் கதைச்சனாங்கள்...."

"எவ்வளவு நல்ல மனுசன்... டேய் அந்த வெத்திலைத்தட்டையெடு.. என்ன கதைச்சுப்போட்டு விட்டனான்... ஆங்... நல்ல மனுசன்..."

"நல்ல மனுசர் கனநாள் வாழுறதில்லை கண்டியோ..." ஒரு எழுபது வயதுக் கிழவர்

ஆம்... அவன் மரணித்துப் போய்விட்டான்... இந்த அழுகுரல்களும் இரைச்சல்களும் அதையே உறுதி செய்தது. நேற்று மாலையில் அது நிகழ்ந்தது...

ஒளி பிரியா இருள் கவிழும் ஒரு கணப்பொழுதில் அவனருகில் யமன்.. நேற்றைய காலையில் ஊளையிட்ட நாயின் ஒலியை அவன் சிந்திக்கவில்லை.. அந்தக் கோட்டானையும் தான்... எனினும் மரணம் அவனைப் பற்றியே சிந்தித்தது. அருகிலேயே இருந்தது... ஒலியை

இருள் விழுங்கும் இறுதித் துடிப்புக்களில் .. அது அவனை விழுங்கிற்று..
"டங்கு டக்கர டக்கர டக்கர.. டங்கு டக்கர டக்கர டக்கர.. டங்கு டக்கர டக்கர.."
"டேய் தம்பி நல்லா அடி ஊர்சனமெல்லாம் கூடி நிக்குது.. வேற வாய்ப்புக்களும் வருமெல்லே.."

ஒரு மரணம் எவ்வாறான மனிதர்களை எல்லாம் ஒன்றிணைக்கின்றது.

எனினும் இந்த மனிதர்களிலிருந்து எல்லாம் வேறுபட்டு ஒரு சீவன்.. அதோ.. அந்த மரத்தினடியில் தகப்பனுக்காய்க் கட்டப்படும் பாடையைப் பார்த்தபடி.. கையில் ஒரு வெள்ளைக் கொடியையும் பிடித்தபடி.... மெதுவாய் அந்தக் கொடியினை ஆட்டும் போது.. விழிகளில் மெதுவாக ஓடும் சிந்தனைகள்..

"அப்பா செத்துப்போயிட்டார்.. அவர் இனி வரமாட்டார்.. வீட்டுக்குள்ளுக்குப் போனா அம்மாவும் அம்மம்மாவும் என்னையுமெல்லோ கட்டிப்பிடிச்சு அழுகினம்.. எனக்கு ஏனோ அழுகையே வரேல்ல.."

"அப்பாவை ஒரு வாங்கில கிடத்தியிருக்கு. விளக்கு எல்லாம் கொழுத்தி சாம்பிராணிக்குச்சி வாசத்தோட அந்த இடமே ஒரு மாதிரியிருக்கு.. அப்பாவைப் பாத்தா நேற்றுப்பாத்த மாதிரியும் கிடக்கு... லேசா வித்தியாசமாவும் கிடக்கு.."

"கால் பெருவிரல் ரெண்டையும் கட்டி வச்சிருக்கினம்.. அப்பா செத்துத்தான் போட்டார்.. நேற்று கடைக்குப் போன நேரம் ஆரோ சுட்டுப்போட்டாங்கள்.. இனி ஸ்கூலுக்கு ஆர் கொண்டு போய்விடுறது.. கேக்கும் இல்ல.... சைக்கிள் சவாரியுமில்ல.. விளையாட்டு.. படிப்பு ஒன்டும் இல்ல.."

"அப்ப.. அப்பா இல்லையென்டால் ஒன்டும் இல்லையோ..? எனக்கு இப்பிடியென்டால் அம்மாவுக்கும் இப்பிடித்தானே.. ஆனா அம்மா அழுறா.. எனக்கு அழுக வரேல்ல.."

"தம்பி டேய் ... என்னடா இஞ்சை வந்து நிக்கிறாய்.. அங்க அம்மம்மாவும் மாமாவும் தேடுகினம்.."

"மாமா என்னைய கையில் பிடிச்சுக் கிணத்தடிக்குக் கூட்டிக் கொண்டு போறார்.. அப்பாவையும் அங்க கொண்ணந்தீட்டினம்.. அப்பாவின்ற முகத்தில் சிரிப்புக் கொஞ்சம் இருக்கு... அப்பான்ற தலைமாட்டில

கண்ணாடியப் பிடிச்சு ஏதோ பிறவுன் கலரில இருக்கிறதை வக்கட்டாம்...”
“மாமா அழுது அழுது சொல்லுறார்..”

“அப்பான்ற கண்ணை லேசாத் திறந்து பாக்க ஆசையாக் கிடக்கு.. ஆனா பயமாவும் கிடக்கு.. முந்தியெண்டால் அப்பாவ எவ்வளவு ஆசை ஆசையாத் தொடுவன் ஏன் இண்டைக்குப் பயமாக்கிடக்கு அப்பா செத்திட்டாரெல்லோ அதுதானாக்கும்..”

“எல்லாரும் கத்திக் கத்தி அழுகினம்.. எனக்கு வேட்டியும் கட்டி ஐயர் மாதிரிப் பூனூலும் போட்டாச்சு.. எனக்கு இப்ப அம்மாவையும் பாக்கப் பயமாக் கிடக்கு..”
“ஐயோ பெட்டிய மூடாதீங்கோ.. பாரண்டா உன்ர அப்பாவைப் பாரண்டா.. எல்லாரும் கதறுகினம்..”
“எனக்கு மட்டும் அழுகையே வரேல்ல எல்லாரையும் விட நான் தான் அப்பாவ வடிவாப் பாத்துக்கொண்டேயிருக்கிறன்.. முகம் கொஞ்சம் கறுத்திருக்கு..”

“ஒரு மாதிரி அடிச்சுப் பிடிச்சுப் பெட்டிய மூடியாச்சு.. என்னைய முன்னுக்கு நடக்கட்டாம்.. தோள்ள ஒரு பெரிய பானையோட...ம்.. கொஞ்சம் சின்னனா வாங்கியிருந்தா எனக்கும் தூக்க வசதியாயிருக்கும்.. கவனமாகக் கொண்டு போக வேணும்.. என்ர கவனம் முழுக்க அந்தப் பானையிலேயே இருந்ததால இவ்வளவு தூரமும் பெரிசாத் தெரியேல்ல.. அப்பாடா ஒரு மாதிரி வந்தாச்சு..”

“திரும்பவும் பெட்டியத் திறக்கச் சொல்லுகினம்.. மஞ்சள் நிற அரிசியை அப்பாவுக்கு மேல் போடச் சொல்லுறார் மாமா.. இப்ப நான் மட்டும் தான் அப்பாவுக்குப் பக்கத்தில நிக்கிறன்.. பெட்டில படுத்திருக்கிறது ஆர்?.....என்..ற அப்பாவெல்லோ.. அப்பாவை இனி கொழுத்தப்போறமோ.. ஐயோ அப்ப இனி எனக்கு அப்பா இல்லையா.. நானும் அம்மாவும் தனியத்தான் வாழப்போறமோ.. எனக்கு அப்பா கட்டாயம் வேணுமே.. மாமா வேண்டாம் மாமா.. அப்பாவைக் கொழுத்த வேண்டாம் மாமா.. எனக்கு அப்பா வேணும் மாமா..”
அவனுடைய வேண்டுகோள்களை யாரால்தான் நிறைவேற்ற முடியும்.. அவனுடைய அழுகையினூடேயே அவன் தன்னுடைய கடமைகள் எல்லாவற்றையும் செய்து முடித்தான்..

ஆயிற்று.. எல்லாம் ஆயிற்று..

கடந்து போன சில நாட்களில் அவன் கவனம் மிகச் சிதறிப் போயிற்று.

"ஏன் அப்பா எங்களை விட்டிட்டுப் போனவர், எனக்கு அப்பா இல்லாட்டி ஒன்டுமே ஏலாதுதானே, என்ர அப்பா அப்பிடி என்ன செய்தவர் சுடுறதுக்கு, இனி அம்மா வேலைக்குப் போகவேணும், என்ன வேலைக்குப் போவா? எனக்குப் படிக்க காசும் வேணும், உடுப்பு, சாப்பாடு எல்லாம், எல்லாத்துக்கும்.. அப்பா, ஏனப்பா எங்களை விட்டிட்டுப் போனீங்கள்.."

அப்பாவா எங்களை விட்டிட்டுப் போகேல்லதானே..?

"அப்பாவைச் சுட்டவங்கள்.. என்ர அப்பாவைக் கொண்டு போட்டாங்கள்.. என்ர அப்பாவைக் கொண்டவங்களை நான் என்ன செய்யவேணும்? கொல்லத்தானே வேணும்.."

"ஓம் கட்டாயம் கொல்லோனும்.. ஓ.. நான் கொல்லுவன்.. நான் கட்டாயம் கொல்லுவன்.. அப்ப எனக்கு ஒரு துவக்கு வேணும் அதால நான் சுடப் பழக வேணும்.. எனக்கு துவக்கு தர கூடிய ஆக்களத் தேட வேணும். நான் அவையிட்டப் போக வேணும்.. அப்பாவைக் கொண்டவங்களை நான் கொல்லுவன்.."

அவனது வாழ்வின் திசை மாறிப்போயிற்று. அவனது பகல்களை அவன் தெருவோரத்தில் தொலைத்தான். இரவுகளை ஆயுதம் தாங்கிய கனவுகளால் நிறைத்தான்.... எனினும் அது அவனுக்கு கைகூடவில்லை.

"தம்பி ஸ்கூலுக்குப் போகேல்லயோ."

"இல்ல. நான் போகேல்ல."

"ஏனப்பன்.. சும்மா யோசிச்சுக்கொண்டிருந்தும் என்னத்தைக் கண்டனி...."

மௌனம் பதில்களாகிப் போயின

அவர்கள் அவனைத் தெருவோரத்தில் கண்டார்கள்.. அவனும் அவர்களைத் தெருவோரத்தில் கண்டான்.. எனினும் பரிச்சயமற்றவர்களாய் தாண்டிக்கொண்டே..

அன்றும் அவன் தெருவோரத்தில் நின்றான். திடீரெனப் பெரும் திரள்.. ஆயுதம் தாங்கிய ஒரு சிலர் ஒருவனை இழுத்து வந்தார்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீருடன்

வேள்வியிற் பலியிடப்படப் போகும் ஆட்டைப்போல்..

பெரும் திரளில் அவனது மனைவியின் அழுகுரலும் அவனது மகனின் அழுகுரலும் வெளியே கேட்டது... பெரும் திரள் மக்கள் வாய்மூடி மௌனித்திருந்தார்கள்..

அவர்கள் அவனை முழங்காலில் இருத்தினார்கள்.. ஆயுதம் தாங்கியவன் அவன் செய்த குற்றங்களை அடுக்கிக்கொண்டே போனான்..

யார் எங்கே எப்படி விசாரித்தது என்பது யாருக்கும் தெரியாது.. அவனது குற்றங்கள் நிரூபணமாயிற்றா என்றும் தெரியாது.. எனினும் அவன் மரணிக்கப்போகின்றான் என்பது மட்டுமே மக்களுக்குத் தெரிந்திருந்தது.

அவர்கள் வாய்மூடி மௌனியாயிருந்தனர்..

இறுதியில் மக்களுக்குத் தெரிந்தது கண் முன்னே நடந்தது.

சிதறித் தெறித்தது தலை...

"ஐயோ அப்பா.. என்ர அப்பா.. .. .." மீளவும் அழுகுரல்..

அது அவனைப் பாதித்தது.

நானும் இப்பிடித்தானே. எனக்கும் இப்பிடித்தானே. இந்தக் குழந்தைக்கும் அப்பாயில்ல.. எனக்கும் அப்பாயில்ல... நாளைக்கு என்னப்போல இவனும் றோட்டில ஆருக்காக காத்திருக்க..

எனக்கும் ஆயுதம் கிடைச்சால் நானும் என்ற அப்பாவைக் கொண்டவனைக் கொல்லுவன்.. அவனுக்கும் பிள்ளையிருக்கும் அவனும் என்னைக் கொல்லுவான். இப்படியே மாறி மாறி.....

ஐயோ.....

எங்கட அப்பாக்கலெல்லாம் எங்களுக்கு வேணும். நாங்கள் அப்பாக்களோட வாழ வேணும். நான் ஆரையும் கொல்ல மாட்டன்.. எந்த அப்பாவையும் கொல்ல விடமாட்டன்.. ஏன் எங்கடயாக்கள் எல்லாம் இப்படித்திரியினம்.. அவயின்ற அறிவு எங்க போச்சு..

ஓம் இதைத் தடுக்கிறதுக்கு எனக்கு அறிவு வேணும்.. நான் படிப்பன் நல்லா நல்லா.. எங்கட அப்பாக்களைப் பாதுகாக்கிறதுக்கு அறிவு தான் ஆயுதம்...

நான் படிப்பன்.. நாங்கள் படிக்கோணும்..

அவன் பயந்து போய் வீடு நோக்கி ஓடுவதாகவே கலைந்து போன மனிதர்கள் சிந்தித்தார்கள்...

ஒரு புதிய புயலின் அசைவை அவர்கள் தெரிந்து கொள்ள நியாயமில்லைதான்.

*15.10.1999*

# நசுங்கல்

மெல்லிய மின்மினிப் பூச்சிகளைச் சூடிக்கொண்ட இரவு வன்னிக் காடுகளின் மேலே தன் ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்தது. உய்த்தறிய முடியாத ஏதோ ஓர் ஒலி அடிக்கடி உருப்பெற்று இரவை இன்னமும் அகோரமாக்கும் ... ...

கீற்றுக் கொட்டிலின் இடுக்குகளின் ஊடே விழிகளை வானத்தில் தொலைத்துவிட்ட வாசன் ஏதோ கடும் சிந்தனையில்...

சை... நாசமாப்போன நுளம்புகள்... கடிச்சித் தின்னுது...

எதன் மீதோ தீர்க்க முடியாத ஆத்திரமாயிருந்த அவன் சிந்தனைகளின் எச்சம் நுளம்புத்திரியின் புகையையும் மீறிக்கடித்த ஓரிரு நுளம்புகளின் மீது மிக வேகமாகத் தீர்க்கப்பட்டதால் கர்ண கடூரமாய் குரல் மேலொலித்திற்று. நாக்கைக் கடித்துக்கொண்டான் வாசன்
'ஐயோ அம்மா எழும்பீட்டாவோ தெரியேல்ல'

"தம்பி.. வாசன்.... டேய்.. ராசா"

அம்மாதான்..

"என்னணை.. குழப்பிப்போட்டனோ..?"

"நீதானடா குழம்பிப்போய்க்கிடக்கிறாய். இந்த யோசனைகளை கொஞ்சம் விட்டுப்போட்டுப் பேசாமப் படு"

அவன் உடம்பிலிருந்து வெளிப்பட்ட நீண்ட பெருமூச்சு, யோசனைகளிலிருந்து மீண்டு வரான் அவன் என்பதைக் கிழவிக்கு உணர்த்திற்று

ஒவ்வொரு இரவிலும் தூக்கம் வராமல் நீண்ட நேரம் யோசித்துக் கிடப்பதே வாசனுக்கு வேலையாகப் போய்விட்டது. கொட்டிலின்

இடுக்கினூடே உள்ளே விழும் நிலவின் ஒளி அடிக்கடி அவனது யாழ்ப்பாண வாழ்வை நினைவுபடுத்தும்.
கடந்து போகும் நாட்களில் தொலைந்து போகா நினைவுகள் அவை...!

" டேய் ராசன் எங்கடா கொண்ணரைக் காணேல்ல...." அம்மா கத்தினாள் "பாழாப்போன குரங்குகள் பாஞ்சு இந்த ஓட்டை உடைச்சுப் போட்டுதுகள்... அவர் யோசனையில்லாம திரியிறார்.... என்ர ராசா ஒருக்கா ஏறி மாத்தி விடனை.."
அம்மாவின் வேண்டுதல் அன்பாய் விழும்..

"சும்மாக் கிடவுங்கோ... எனக்கேலா" நான் மிக வேகமாய் மறுதலிப்பேன். அண்ணா வந்து அதைச் செய்து முடிக்கட்டும் என்ற எண்ணமே அந்த மறுதலிப்புக்குக் காரணமாய் அமையும். எனினும் அன்று ஓடுகள் மாற்றப்படவேயில்லை. அன்றைய இரவில் முழுநிலவின் ஒளியும் வீட்டினுள்ளே பொதிந்து கிடந்தது....

இப்ப அண்ணரும் இல்ல... வீடும் இல்ல...

நிலவு மட்டும் எப்போதும் போல் இப்பவும் இடுக்கினூடே உள்ளே விழும் முயற்சி கொண்டு. . . .
அம்மா அடிக்கடி சொன்ன வாசகம் ஞாபகங்களை மேலும் கிளரும்

"அவற்ற செத்த வீடுதான் இந்த வீட்டில முதல்ல நடந்தது. இனி மூத்தவன்ர கலியாண வீடுதான் அடுத்து நடக்கோணும்.... அதுக்குள்ள நான் போக மாட்டன்... உவன்ர கலியாண வீட்டைப் பெரிசாச் செய்தேயாவன்."
"செல்லம்மாவுக்கு என்ன குறைச்சல் இப்ப நினைச்சாலும் பெடியள் ரெண்டுக்கும் உடனே செய்யலாம் தானே'' பக்கத்து வீட்டு பாலனண்ணை முணுமுணுப்பார்.

"ஓம் பாலு, ஐப்பசி பிறக்கட்டும் பொறன்"

செல்லம்மா...... என் செல்ல...அம்மா
உன்னைப்போல் இன்னும் எத்தனை எத்தனை செல்ல அம்மாக்களின் விருப்பங்களை நேசன் அண்ணா மாதிரியான எத்தனை அண்ணன்மார்களால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

"இன்று மாலை வன்னி நோக்கி நகரும்படி வேண்டப்படுகின்றீர்கள்."

வாசனின் வாழ்க்கைச் சிதிலத்தின் திறவுகோலாய் அந்த அறிவிப்பு வெளியாகியது...

யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வன்னி நோக்கி நகரத் தொடங்கினர்.

இதுதான், இதுதான் பேரலையாய்.... பெரு நெருப்பாய் எங்கள் வாழ்க்கைச் சுவடுகளை அள்ளிப்போயிற்று.....

நகர்ந்த தெருக்களில் எல்லாம் திசைக்கொன்றாய் மரணித்தவர்களைப் புதைத்தும்.... எரித்தும்.....

"ஐயோ... நேசனையும் இப்பிடித்தானே புதைச்சனாங்கள்
இப்ப திரும்பிப்போய் எங்க புதைச்ச இடம் என்டாலே சரியான இடம் தெரியாது"

அம்மா அரைப்பைத்தியமானதும் வாசனைத் தன் முந்தானையில் முடிந்து கொண்டதும் அவசரமாய் சாந்திக்கு அவனைத் திருமணம் செய்து பார்த்ததும் எல்லாம் எல்லாமே படமாக கீறல் விழுந்த இசைத்தட்டாக வாசனின் ஒவ்வொரு இரவுகளையும் ஆக்கிரமிக்கும்.

"தம்பி ராசா இப்பிடி யோசிச்சு யோசிச்சு உடம்பக் கெடுத்துக்கொள்ளாம படா"

"ஓம் அனேய்..."

விடியல்...

நாடாயிருப்பினும் காடாயிருப்பினும் எப்போதுமே விடியல் அழகு தான். ஏனோ மனம் விகாரப்பட்டு போன பின் அவர்களின் ஒவ்வொரு விடியலும் ஒரு இனம் புரியாத பயத்துடன் தான் விடியத் தொடங்கின..

"அம்மா இந்தக் கடைக்குப் போட்டுவாறன்"

"இஞ்சாருங்கோ வரேக்க அரப்போத்தில் லாம்பெண்ண வாங்கியாறீயளே"

'போத்திலை இஞ்ச தா சாந்தி..... நான் குடுக்கிறன்'

செல்லம்மா போத்தலை வாங்கி அவன் கையில் தரும்போதே மெதுவாய்க் கையைப் பற்றிக் கொண்டாள். அவன் நேரே அவள்

கண்களைப் பார்த்தான். அதில் ஓடிய செய்திகள் அவன் கண்களைப் பனிக்கச் செய்தன. விழிகளை நிலம் நோக்கித் திருப்பிய படி தாயிடமிருந்து விடை பெற்றான். "நான் கவனமாப் போட்டு... வருவன் அம்மா... பயப்பிடாத.."

'செல்லம்மா..... என் செல்ல அம்மா'

"உன் விழிகளின் ஊடே ஓடிய வினாக்களிற்கு எப்படியம்மா? விடைதருவேன் நான்! உன்னை விட்டுப் போக மாட்டேன் என்று எப்படி உறுதி தருவது. வானத்திற் பறக்கும் ஏதோ ஒன்றில், எங்கிருந்தோ வந்து விழுந்து புகையுடன் வெடிக்கும் இன்னொன்றில், சொய்ங் எனும் ஒலியுடன் சின்னதாய்ப்பறக்கும் சன்னம் ஒன்றில், இப்படி ஏதாவது ஒன்று தானே என் வாழ்வைத் தீர்மானிக்கும், என் இருப்பை உறுதி செய்யும்."

இந்த மண்ணில் எல்லாத் தாய்க்கும் இப்படியா?

ஐயிரு திங்கள் கரு வளர்த்து, உயிர் பிரியும் வலியுடன் உலகில் பெற்று, சிறு சிறு உதைகளை நெஞ்சில் தாங்கி, இருபது வயதிற் பறி கொடுப்பது, இந்த மண்ணில் எல்லாத் தாய்க்கும்...

"அண்ண, வீட்ட சொல்லிப் போட்டோ வந்தனீங்கள்... நடு ரோட்டிலை நடக்கிறியல்... நாசமாப் போக..."

வாசன் ஒரு திடுக்கிடலுடன்... தெருவின் அந்தத்திற்கு நகர்ந்தான்.

"அட..... கடை தாண்டிக் கன தூரம் வந்திட்டன் போலக் கிடக்கு"

"அண்ணை, அரப் போத்தில் லாம்பெண்ண தாங்கோ"

"வாசன் ஏதோ சத்தம் கேக்கிற மாதிரிக் கிடக்கு... கெதியா வீட்ட போற வழியப்பார், இந்தா லாம்பெண்ண"

ஐயோ.... அம்மா அவன் கண்களின் ஊடே பார்த்த அந்தச் சத்தமோ..

எனினும் ஒலியை விட வேகங்கொண்டு அது..... அது மிகத்தாழப் பறந்தது.....

உயிர்க் கொடியை உலுக்கும் ஒலி

காற்றில் உதிரும் வாழ்க்கைப் பூக்கள்
ஐயோ...

இருந்தவைகள் எல்லாம் இருள்சூழ்ந்து.... கரும்புகையெழும்பிப் பிரளயம் தெறிக்கும்

எல்லாம், எல்லாம் ஓய்ந்த பின்

வேலி ஓரத்தில் விழுந்து கிடந்த வாசன் மெதுவாய் எழுந்து சுடுகாட்டின் ஓலங்கள் ஊடே தெருவைத் தேடினான்.

"தூரத்தில வாரது அம்மா மாதிரிக் கிடக்கு"

வாசன் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு தாயை நோக்கி ஓட எத்தனித்தான்.

எனினும் கால்களிற் பற்றிக் கொண்ட நடுக்கம் அவனை அந்தச் சுடுகாட்டில் மீள விழவைத்தது.

" அம்மா......... ஐயோ அம்மா............ நான் உயிரோட இருக்கிறன்...... சாந்தி நான் சாகேல்ல.................."

அவனது குரல் பெருங்குரலாய்த் தொடங்கி ஓலமாய் எதிரொலித்தது.

செல்லம்மா வாசனின் தலையை மடியிற் சுமந்தபடி ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

"அம்மா நான் சாகேல்ல...நான் சாகேல்ல"

சாந்தி விக்கி விக்கி அழுதபடி அவன் உடம்பை எல்லாம் தடவிப்பார்த்தாள். அவளுக்குரியதல்லவா அது...

அம்மாவையும் சாந்தியையும் தூங்க வைக்க அன்றைய இரவு வாசன் பெரும்பாடு படவேண்டியதாயிற்று

அவனால் தூங்க முடியவில்லை, வழமை போல

"நாளைக்கும் விடியும். நானும்.... நாமும் எங்கட வாழ்க்கையும்..... எப்பிடி.... எப்பிடி? எனக்கும் பிள்ளை பிறக்கும். அதுக்கும் இந்த வலியும் வேதனையும்... நானும் அம்மா மாதிரி அரையும் குறையுமா தெருவில கிடந்து ஒப்பாரி வைப்பனோ?..... ஐயோ என்னால ஏலாது."

"நேசனை மாதிரிப் புதைச்ச இடம் தெரியாமல்... இல்லாட்டி விடியப் பிஞ்சு போய்க்கிடந்த அந்த முகந்தெரியாத பெடியனைப் போல என்ர பிள்ளையும்.. மாட்டன்....... மாட்டவே மாட்டன்..."

"விடிய முள்ளியவள ஆஸ்பத்திரிக்குப் போய் ஒப்பரேசனச் செய்வம்.... எனக்கு சந்ததி வேணாம்... எனக்குப் பிள்ளையும் வேணாம்..."

வாசன் நிம்மதியாய்த் தூங்குவதை செல்லம்மாவும் சாந்தியும் ஓரக்கண்ணால் பார்த்தபடி ஒருக்களித்துப் படுத்திருந்தனர்.
ஈழம் இருண்டே கிடந்தது.

*05.12.1998*

# நிறங்களற்ற கனவுகள்

அது மிகவும் அழகானது. பல்வேறு நிறங்கள். பல்வேறு வடிவங்கள்.

"காலுக்கு மெத்து மெத்தெண்டு.. வளந்த ஆக்கள் மெல்லிசா போடுவினம்.. கட்டப்புட்டுக்கள் மொத்தமாப் போடுவினம்.. ஆனா ஒரு கெட்ட பழக்கம்.. அதுக்கு பொருத்தமில்லாதத, அல்லாட்டி புதுசா போட்டால்... கடிச்சுப் போடும்"

"ஓம் அது கடிச்சுப் போடும்..."

"அம்மா கடிச்சுப்போட்டுது... அம்மா... அம்மா கடிச்சுப்போட்டுது..."

ராம் பாயிலிருந்து இரண்டு காலையும் உயரத்தூக்கிய படியே "கடிச்சுப்போட்டுது... கடிச்சுப்போட்டுது..." என்று கத்தினான்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில்... இது பொதுவான விடயம்.

படுக்கையில் பலபேர் கண்ணுக்குத் தெரியாத ஜந்துக்களால் கடிக்கப்படுவதும் பொது வைத்தியசாலையில் மரணமாவதும் .. நிரம்பப் பொதுவான விடயம்.

ராம் காலைச் சடாரெனத் தூக்கியதால் தலை லேசாக மேலே போய் தம்பியின் வயிற்றில் முட்டியது. தம்பி திடீரென சுருண்டு எழும்பித் தட்டுத்தடுமாறி தனது கையால் தரையைத் தடவி தலை முழுவதும் சரத்தால் போர்த்திப் படுத்திருந்த தம்பியைய்யாவின் சரத்தை இழுத்து விட்டான். அருவி வெட்டிய களைப்பில் அசந்திருந்த தம்பியையா அதிர்ச்சியில் காலால் எட்டியுதைக்க குப்பி விளக்கின் எண்ணெய் விசாலத்தின் முகம் மீது முழுதாய் தெறித்தது.

"நாசமாப் போனதுகள்.. நிம்மதியாப் படுக்கவும் ஏலாது".. விசாலம் தனது பொதுவான பல்லவியைப் பாட, தம்பியய்யா குப்பி விளக்கைத்

தடவி நெருப்பெட்டியால் கொழுத்தினார். ராம் கத்திக்கொண்டே இருந்தான்.

"என்ன கடிச்சுப்போட்டுதெண்டு கத்தினனி. எங்க காட்டு பாப்பம்"

உலுக்கி எழுப்பப்பட்ட ராம் சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பேயில்லாமல் தனது வலது காலை தடவிப்பார்த்தபடி எல்லோரையும் விழித்துப் பார்த்தான். காலில் எதுவித தடயங்களும் தட்டுப்படாததால் தான் கனவு கண்டது அப்பட்டமாய் அவனுக்கு புரிந்து போனது.

"அப்பா அண்ணருக்குச் செருப்புக் கனவு.... பாழாப்போன அந்தச் செருப்பையொருக்கா வாங்கிக் குடுத்தாப்பிறகுதான் நாங்கள் நிம்மதியா நித்திர கொள்ளலாம்...."

தம்பி அலுத்துக்கொண்டான். அந்த அலுப்பில் அண்ணாவிற்கு எதுவும் உண்மையிலேயே கடித்துவிடவில்லையென்ற ஒரு திருப்தியும் ஏதோ ஒரு இயலாமையும் மெலிதாய் படர்ந்திருந்ததுடன் அந்த நேரத்தின் கனத்தையும் அமைதியையும் குறைத்து எல்லோரையும் மீண்டும் அருகருகே தூங்க வழிசமைத்தது.

எல்லோருமே படுத்துக்கொண்டது உண்மைதான். ஆனால் ராமினால் மட்டும் தூங்க முடியவில்லை. அவனிற்கு எதுவும் பெரிய ஆசையில்லை. ஒரு சோடி அழகான "சாண்டில்ஸ்" செருப்பு.

"ஒரு எண்ணூறு தொள்ளாயிரம் வரும். ஆனா அப்பாட்ட கேக்க ஏலுமே. நானும் தம்பியும் படிக்கிறம். அம்மாவுக்கு லேசான வருத்தங்கள் இருக்கு. அப்பாட வேல கூலி. நல்லா வயசும் போட்டுது. இந்த வருசம் நான் ஓ.எல் பரீட்சை எடுக்கும் வரைக்கும் அவர் படிப்பிக்கிறதே பெரிய விசயம். உடுப்பு, சாப்பாடு, மருந்து நாசமாப்போன டியூசன் இதுக்கெல்லாத்துக்கும் பிறகு..... சாண்டில்ஸ்.... எப்பிடி நான் அப்பரிட்ட கேக்கிறது. ஓ.எல் க்குப் பிறகு நான் உழைப்பன் தானே அப்ப பாப்பம்"

தூக்கம் தொலைந்த இரவுகளில் ராம் இதைத்தான் அடிக்கடி நினைத்துக்கொள்வான்.

"ஓ.எல் க்குப்பிறகு உழைப்பு, முதல் சம்பளத்தில நல்ல செருப்பு"
"ஓ.எல் க்குப்பிறகு உழைப்பு, முதல் சம்பளத்தில நல்ல செருப்பு"

அவன் நிம்மதியாய் தூங்கத்தொடங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந்திருந்தது.

ஓ.எல் பரீட்சை முடிந்தது. ராம் வேலைக்குப் போக ஆசைப்பட்டான். ஆனால் கூலி வேலைக்கல்ல. ராமின் வீட்டிலிருந்து நான்காவது வீட்டில் வீடியோ போட்டோ படம் எடுக்கும் ஜெகன் தனக்கு ஒரு உதவியாளர் தேவை என கூறி ராமை தனது உதவியாளராக்கிக் கொண்டான்.

"ஐ...யா வேலை கிடைச்சிட்டுது. முதல் மாசம் முடியச் சம்பளம், உடனே ஒரு செருப்பு. ஆனா ஜெகன் அண்ண சம்பளத்தைப் பற்றிச் சொல்லேல்ல. எவ்வளவு தருவார். எனக்கு ஆக குறைஞ்சது ஆயிரம் ரூபா வேணும். முப்பது நாளும் நான் வேலைக்குப் போனனென்டால் ஒரு நாளுக்கு முப்பத்தஞ்சு ரூவாயாவது ஆக குறைஞ்சு தரோணும் செருப்பு வாங்க. தருவாரோ?".

"டேய் மடையா சாகப்போறியே நடுறோட்டில கனவுகண்டுகொண்டு வாற"

சைக்கிளில் வந்த ஒருவன் ராமை உலகிற்கு இழுத்து வந்தான்.

"சொறி யண்ண"

"இந்த ஒரு இங்கிலிஸ் காணும் செய்யிறதெல்லாம் செய்துபோட்டுத் தப்பிறதுக்கு"

சைக்கிள்காரனுக்கு எதன் மீது கோபம் என்று தெரியவில்லை.

"நான் எப்ப செருப்புக் கனவு கண்டாலும் மற்றவைக்குத்தான் கரச்சல். இனி செருப்புக் கனவு காணக்கூடாது. ஏன் நான் கனவு காணோணும்? அடுத்த மாசம் வாங்கிப் போடுவன். முப்பதுநாள், எண்ணி முப்பது நாள்"

பெருமிதம் முகத்தை முழுவதுமாய்ப் பற்றிக் கொள்ள ராம் மெல்லிய புன்னகையுடன் முதல் நாள் வேலை முடிந்து வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

"ராம்.. உமக்கு மாதம் ஆயிரத்து ஐநூறு றூவா சம்பளம். ஆனா வேலைக்கு வராட்டி ஒரு நாளைக்கு அம்பது ரூவா தரமாட்டன்."

கந்தசாமி கோயில் முருகனுக்கு பாலும் தயிரும் பஞ்சாமிர்தமும் அபிசேகம் செய்யப்படும் போதெல்லாம் முருகனுக்கு எப்படியிருக்கும் என ராம் நினைத்ததுண்டு. அவனுக்கு ஜெகனின் வார்த்தைகள்

காதுவழியே புகுந்து அபிசேக முருகனின் அனுபவத்தைத் தந்தது.
"முதல் மாசம் முதல் சம்பளத்தில எனக்கு சாண்டில்ஸ்"
ராம் கனவு காணத் தொடங்கிவிட்டான்.

"என்ன சம்பளம் காணாதோ பேசாம இருக்கிறாய்"
"இல்லையண்ண வடிவாக்காணும்"
"ஆனா முதல் மாசம் ரெயினிங், சம்பளம் தரமாட்டன், ஒழுங்கா விசயம் பிடிச்சாப்பிறகுதான் சம்பளம்..... சரியோ"
"ஓம் அண்ண"

"முதல் மாசம் முதல் சம்பளத்தில இல்ல.....ரண்டாம் மாசம் முதல் சம்பளத்தில எனக்கு சாண்டில்ஸ்"
மெல்ல எழும்பிய ஏமாற்ற உணர்வுகளை அடக்கிக் கொள்ள ராம் பெரும் பிரயத்தனப்பட்டான்.

முதலில் வீடியோ படம் எடுக்க லைட் பிடிப்பது, சூம் செட் பண்ணுவது, வெளிச்ச அளவிற்கு ஏற்ப சட்டர் செட் பண்ணுவது... பிலிம் ரோல் லோட் பண்ணுவது, நாட்கள் உருள உருள ராம் படப்பிடிப்பின் ஆரம்ப நுட்பங்களைக் கற்றுக் கொண்டான்.

"ராம் இந்தா கெமரா... முப்பத்தாறு சொட் பிலிம் ரோலை லோட் பண்ணிக்கொண்டு போய் உனக்கு விருப்பமானதெல்லாத்தையும் படம் எடுத்துக்கொண்டு வா பாப்பம்"

நகரம், காடு, குளம், கோயில் எல்லா இடமும் ராம் கமெராவுடன் திரிந்து திரிந்து படங்களை எடுத்தான்.

"என்ன பதினொரு படம் விதம் விதமா சாண்டில்ஸ் போட்ட ஆக்களின்ற காலை படம் பிடிச்சிருக்கிறாய்... எனக்கு விளங்கேல்ல!." ஜெகன் தலையைச் சொறிந்தார்.

"ஏதோ ஒரு வித்தியாசமாத்தான் இருக்கு எண்டாலும் நல்லா எடுத்திருக்கிறாய். கொஞ்சம் இரசனை உணர்வு தனக்குள்ள இருந்தாத்தான் படம் சரியா எடுக்க ஏலும். என்னோடயே இருந்தா போகப்போக மெருகூட்டலாம்.... சரியோ... சரி.. எல்லாம் சரியாப் போகும்."
"என்னயறியாமலே நான் கனவு கண்டிட்டன் போல இருக்கு...

சாண்டில்ஸ் போட்ட காலுகள எப்ப நான் படம் எடுத்தனென்டு தெரியாமக் கிடக்கு. ஜெகனண்ணயிக்கு விளங்கேல்ல நான் காலப் படம் எடுக்கேல்ல எண்டு"

சிரித்தபடியே ராம் வீட்டிற்குத் திரும்பினான்.

"என்ன மோனே வேலைக்குப் போகத் தொடங்கினாப் பிறகு எப்பவும் சிரிச்சுக்கொண்டே வீட்ட வாராய். எனக்கும் சந்தோசமாய்தான் கிடக்கு நீ மூத்தவன் உழைக்கத் தொடங்கீட்டயெண்டால் எங்கட பாரமும் குறைஞ்சு போகும். தம்பியையும் நல்லாப் படிக்க வைப்பாயெல்லோ"

ராமின் மனதை ஏதோ உறுத்திற்று.

"அம்மா இப்பவும் ஒரேயொரு வீட்டுச் சட்டையோட இருக்கிறா... நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கேக்கப் போட்டிருந்தது... அப்பரிட்ட மாத்திக் கட்ட நல்ல சாரம் இல்ல... தம்பிக்கு ரண்டு சேட் காச்சட்டதானிருக்கு... எனக்கும் அதே தான்...".

இரவு அம்மண உடலுடன் அழகான சாண்டில்ஸ் போட்ட பதினொரு பேர் அவனது கனவில் வந்தார்கள்.

"ஆர் ஆக்கள்?... கொஞ்சம் தெரிஞ்ச முகமாக் கிடக்குது... இங்கிதம் தெரியாததுகள்... சட்டையப் போடாமல் சாண்டில்ஸ் போட்டாச் சரியோ... எனக்கு இவயளப் பிடிக்கயில்ல... ஆனா தெரிஞ்ச முகமாக் கிடக்கே...ஆரது.. ஆரது.....

அப்பா மாதிரிக் கிடக்கு.. ஓம் அப்பாவே தான்.. ஐயோ அவருக்குப் பின்னால அம்மாவும் தம்பியும் அம்மணமா.. சாண்டில்ஸ்சோட.. முருகா.."

கத்தியபடியே ராம் திடுக்கிட்டு எழும்பினான். ஆனால் எவர் மீதும் அவன் முட்டுப்படவேயில்லை. அவன் வேலைக்குப் போவதால் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதால் அவர்கள் எல்லோரும் அவனை விட்டுச் சிறிது தள்ளிப்படுத்திருந்தார்கள்.

"ராம் இந்தாரும் உம்மட சம்பளம் நல்லா வேலை செய்யிறீர் தொடர்ந்து இப்பிடியே வேலை செய்தீரெண்டால் சம்பளம் கூடும்."

"அம்மா... அண்ணர் பெரிய பையோட வாரா... .. .. ர்" பெரிய சத்தமெழுப்பியபடி தம்பி ஓடி வந்தான்.

அப்பாவும் அம்மாவும் வாசலில் வந்து நிற்க அதே பெருமிதமும் புன்னகையுடனும் ராம்....

"எல்லாருக்கும் உடுப்பு வாங்கிக் கொண்டந்தனான்.... என்ட முதல் சம்பளத்தில...."

"உடுப்புக்கு எண்ணூறு ரூவா... இந்தாண.. மிச்சம் எழுநூறும்...."

அந்த இரவில் அவன் நிம்மதியாய் தூங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந்திருந்தது. எனினும் அது அவனது காலைக் கடிக்கவில்லை.

*31.12.2004*

# ஊமையின் பாடல்

"விடிய வெள்ளனப் போகோணும்"

இரவே ஈசுவரக் குருக்களின் குரல் ஓங்கி ஓர் கட்டளையாய் இறங்கிற்று.

பானுமதி அம்மாவிற்குத் தெரியும் ஈசுவரக் குருக்களின் "வெள்ளனப் போகோணும்" என்பதன் அர்த்தம். இரவே அவரது வழக்கமான மண்நிற லேசான அழுக்குப் பிடித்த வேட்டியையும் அதற்கு மேல் இடுப்பில் கட்டும் பச்சை நிற கட்டம் போட்ட நூலோடிய துவாயயும், கிண்ணம் நிறையத் திருநீறையும், குங்கும டப்பியையும் எடுத்து சின்ன மேசையில் வைத்துவிட்டார்.

"காலைல முளிவியளத்துக்கு இந்த மனிசன்ர ஏச்சைக் கேக்க ஏலாது" என லேசாக அவா புறுபுறுத்தது ஈசுவரக் குருக்களுக்கு உண்மையாகவே கேட்கவில்லை. கேட்டிருந்தால் ஒரு புயல் வீசி ஓயும் அவர்களின் வீட்டில் என யாரும் நினைக்கலாம். உண்மையில் ஈசுவரக் குருக்கள் அவ்வாறில்லை...

ஈசுவரக் குருக்கள் வேதங்களையும் சமஸ்கிருத ஆலாபனங்களையும் கற்று மனதில் நிறுத்திப் புகழ் பெற்றவர். எனினும் எவராவது குரல் உயர்த்திக் கேட்டால் எல்லாவற்றையும் மிக வேகமாக மறந்து விடுவதில் மிக வல்லவர். அது தெரிந்து தானோ, என்னவோ பானுமதியம்மா எப்போதுமே "புறு... புறுப்பு"த்தான்.

குரலுயர்ந்தாள் ஈசுவரக் குருக்கள் வாயடைத்துப் போய் நிற்பதைப் பலதடவைகள் பானுமதியம்மாள் பார்த்து வேதனைப்பட்டிருக்கிறார். "சல்லிக்காசு மதிப்பில்லா மனிசருக்கு முன்னுக்கெல்லாம் இந்த மனிசன் வாய் இறுகி பதைபதைப்போடு நிற்கும் நிலையை" பானுமதியம்மாள் எத்தனையோ தடவை ஈஸ்வரனிடம் முறையிட்டு விரதங்களும் நோற்றாகிவிட்டது. தீரவேயில்லை..

சாபம் வேண்டி வந்தவர் போலும்... ஈஸ்வரன் கைவிட்ட ஈசுவரக் குருக்கள்.
சிறிய அதிர்வுகளிற் கூட ஈசுவரக் குருக்களின் குரல் இறந்து போய்விடும். அதன் பின் காந்தத்தில் ஒட்டும் கம்பியாய் குரல் உயர்த்திப் பேசிய மனிதனின் அடிமையாய் போய்விடுவார் அவர்.

"அடிமையென்றால்..... அடிமைதான்"

சிறுவயதில் என்றோ ஏற்பட்ட மன அதிர்வில் அவர் வாய்மூடி மௌனியாய்ப் போய்.... கிழிந்த காகிதமாய் அலைந்திருக்கலாம் .. அதைப்பற்றி இப்போது சொல்வதற்கு எவருமேயில்லை.

சிறுவயதிலேயே அவரது குடும்பம் ஒரு செல்வீச்சில் ஒருசேர பலியாகிப் போனது. இவர் மட்டும் தண்ணீர் அள்ள கிணற்றடிக்கு சென்றதால் பறந்த செல் துண்டால் கழுத்திற் காயத்துடன் தப்பிக் கொண்டார். பன்னிரண்டாவது அகவையில் அனாதையான இவரை சில உறவுகளும், பல கோயில்களும் வளர்த்துவிட்டன. இருப்பதைச் சாப்பிடவும் இல்லாத போது வலிதாங்கி இருந்தும் வாழ்ந்ததால் ஈசுவரக் குருக்களின் ஒலி இறந்துபோயிருக்கலாம்.

நாதியற்ற ஈசுவரக் குருக்களிற்கு ஏழிற் செவ்வாயுடன் கிரகங்களின் அத்தனை பாவங்களையும் தனது பிறப்புக் குறிப்பிற் சுமந்த பானுமதியம்மாவை கலியாணம் செய்து வைப்பது அப்படியொன்றும் கடினமாயில்லை... யாருக்கும்... எவருக்கும்... ஏன் அவர்கள் இருவருக்கும் கூட.....

ஈசுவரக் குருக்கள்... ஈசுவரக் குருக்களாகவே காலம் முழுவதும் மாறிவிட்டார்.... முதிர் வயதைத் தட்டும் அவர் இப்போது கொஞ்சம் வலுக் கொண்டவராக மாறிவிட்டிருந்தாலும்... காலம் அவரை மாற்றியிருப்பினும் கூட.... அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள எவருமில்லை.

ஈசுவரக் குருக்கள் ஒரு கையாள்தான்.

"ஈசு... கும்பம் எல்லாம் வச்சாச்சோ" வயதிற் குறைந்த பிரதானமான ஐயர் மெல்லிய அதட்டலுடன் வினவினார். "ஓம்... ஐயா"...
நீண்ட இடைவெளியின் மெல்லிய பெருமூச்சுடன் அடுத்த வார்த்தை

அந்த அதிகாலையில் ஈசுவரக் குருக்களின் வாயால் விழுந்தது. அன்று முழுவதும் அந்த இளைஞனை "ஐயா" எனக் கூப்பிடும் ஆதங்கம் மேலெழுந்து வர ஈசுவரக் குருக்கள் இடுப்புத் துண்டை அவிழ்த்து முகத்தில் வழிந்த வேர்வையைத் துடைப்பது போல் அந்த எண்ணத்தையும் துடைத்தழித்தார்.

"நவக்கிரகக் கும்பம், சிவனுமை கும்பம், தண்ணிக் கும்பம்... எல்லாம் வச்சாச்சு ஐயா...."
"அம்மிய கொஞ்சம் அரக்கி வையும், இடம் காணாட்டி வீடியோக் காரன் பேசுவான்."
ஐயரின் வார்த்தைகளில் "ஈசு" வைக் காணவில்லை. ஆனால் ஈசுவரக் குருக்களின் பதில் மாறாமலேயிருந்தது. "ஓம்... ஐயா"

குருக்களுக்கு அம்மியின் பாரம் என்னவோ அந்தச் சூழலில் மனதின் பாரத்தைவிட குறைவாகவே இருந்தது... "ஏன் இண்டைக்கு ரவிச்சந்திர ஐயா வரேல்லயோ" மெதுவாக புதிய ஐயாவிடம் ஈசு வினவினார்.
"அப்பாவோ... அவருக்கு கொஞ்சம் ஏலா... இனி வரமாட்டார்"...

"ஏன் நீர் அவரோட மட்டுமோ வேலை செய்வனென்டு புரோகிதம் படிச்சனீர்..." இளம் ஐயாவின் குரல் உயர ஈசுவுக்கு உள்ளே ஏதோ உடைந்தது.... உடைந்தது நீராய் மாறி மூத்திரப் பையை முட்டிற்று...
"என்ன பேயறைஞ்ச மாதிரி பேசாம நிக்கிறீர்"... அப்பரிட்ட மாதிரி சும்மா காசு பாக்கேலா... வேலையை ஒழுங்காச் செய்யும் காண்"...

யாகக் கட்டில் ஏற்றிய நெருப்பு எரியாமல் புகை தர... விழிகளில் நீர் கோர்த்தது ஈசுவுக்கு...

திருமண மண்டபத்திலே எல்லோரும் எல்லோருக்குமே முக்கியமாய்ப் போனார்கள்.. ஐயாவும் மாப்பிள்ளையும் அடிக்கடி சந்தோசமாய்க் கதைத்துக் கொண்டனர். மணப்பெண்ணின் வெட்கம் மண்டபத்திற்குள் முதலில் வரும் போது அதிகமாய் இருந்ததாய் ஈசுவுக்குப் பட்டது.

"திருநீற்றுத் தட்டு" .... "ஓம் ஐயா"
"............................." .... "ஓம் ஐயா"
"............................." .... "ஓம் ஐயா"

தன்னையறியாமலே வாய் "ஓம் ஐயா" போடத்தொடங்கிவிட்டதை ஈசு உணரவில்லை

"தெப்பைய தாரும்" ... "ஓம் ஐயா"

தெற்பை மாப்பிள்ளைக்குப் பொருந்திப் போனாலும் மணப்பெண்ணுக்கு பொருந்த மறுத்தது. சரிசெய்ய முயன்ற ஐயாவுக்கு கோவம் தலைக்கேறியதற்கு மற்றோர் காரணம் மணமகனின் முகம்மாறியதே.

"இவ்வளவு காலம் வேலை செய்றீர் ஒரு தெப்பை சரியாச் செய்யத் தெரியாதோ...?"

ஐயா மெதுவாய் முணுமுணுப்பதாய் நினைத்துக் கொண்டாலும் மணமேடையிலிருந்த அனைவருக்கும் கேட்டுவிட்டது... ஈசுவை அவர்கள் ஒரு "ஈ" யைப் போலப் பார்த்தார்கள்.

ஈசு திகைத்துப் போய் நின்றார்... தெப்பையின் அளவைக் கூட்டிக்குறைப்பது ஒரு விடயமே அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும்...

"ஈசு மரக்கறித்தட்ட எடும்" "ஓம் ஐயா"
"ஈசு மணிய ஓங்கி அடியும்" "ஓம் ஐயா"
"மேளத்தை நிப்பாட்டச் சொல்லும்" "......................"

ஈசுவுக்கு எதுவுமே தெரியாது என்பதை நிருபிக்க ஐயா முயற்சிப்பது தெளிவாய்த் தெரிந்தது.

நாதஸ்வர இசையை விட கைமணியின் ஓசை ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. ஈசுவை அடிமையாக்கிய படி அன்றும் திருமணம் நடந்தேறிற்று...

ஈற்றில் தனக்கான தட்சணைத்தட்டு சிறிதாய் இருந்ததோ... காசுத்தாள்களின் எண்ணிக்கை குறைவாய் இருந்ததோ... ஈசுவுக்கு உறைக்கவில்லை.

அவரை யாருமே பொருட்படுத்தாமலே இருந்தது தான்... உறைத்துக் கொண்டே இருந்தது.

வீட்டு வாசலில் செருப்புக் கழற்றி வீசப்படும் சத்தம் கேட்டது. பானுமதியம்மா எட்டிப்பார்த்தார்... 'வந்திட்டியலே?'

"கலியாணம் எப்பிடி நடந்தது?"... "எப்படி சோடி"... "எப்பிடி கூட்டம்"... "எப்படி தட்சண"..... அவள் கேள்விகளை அடுக்க... அடுக்க....

அடுத்த அவளின் கேள்விக்கு முன் அந்த வீடே அதிர ஈசுவின் குரல் எழும்பியது.

"ஞான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்கோவன்"....

பானுமதியம்மா விறைத்து நின்றாள்... அயல் வீட்டில் இருந்தவர்கள் எட்டிப் பார்த்தார்கள்.... தெருவிற் சென்ற மரக்கறிக்காரன் தனது கத்தலை உடனேயே நிறுத்தி விட்டான்... ஈசு பெரும் பலங் கொண்டவராக... ஒரு தேசத்தை வென்ற மகாராசனாக எல்லோரையும் ஒரு கணப் பொழுதில் சுற்றிப் பார்த்தார்....

ஆனால் அங்கு எவையுமே நிகழவில்லை...
அவருடைய குரல் உண்மையில் வெளியே வரவேயில்லை... "ஞான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்கோவன்".... என்ற சத்தம் வெறுமனே அவரது நெஞ்சுக்கூட்டுக்குள் மட்டுமே மோதித் தெறித்து இரு நீர்த்திவலைகளாக விழியோரம் பனித்திருந்தது.

"என்னப்பா ...இவ்வளவு கேள்வி கேட்டுட்டன்... பதிலக் காணேல்ல"

"எல்லாம் நல்லா நடந்துது".....

ஈசு வாசல்நடையில் தனது தலை முட்டுப்படாமல் இருப்பதற்காக தலை குனிந்த படியே வீட்டிற்குள் நுழைந்தார். தனித்தனியே வீசப்பட்ட செருப்புக்கள் இரண்டும் அவரைக் கேலியுடன் பார்த்தன.

*10.12.2012*

# சபிக்கப்பட்ட நாயின் சாவு…

நிறங்கள் என் கண் முன்னேமாறிற்று.

அழுத்தி மூடிக்கிடந்த பலூனின் வாய்க்கதவை என் தலை தள்ளத்தொடங்கிற்று.

"யாரோ என்னை இழுக்கிறார்கள்…."

பேரருவியாய் நீர் அந்த பலூனின் வாய் வழியே வழிய…. குகைவாய் இடுக்கையகற்றித் தலையை யாரோ இழுக்க, முனகி… முக்கி… யாரோ எனை வெளித்தள்ள…..

"ஐயோ…. பயமாக் கிடக்கு… கண் முழுக்க வெளிச்சமடிக்குது… வாயத் திறந்து நான் கத்தப்போறன்"

பிரசவ அறையிலிருந்து பீறிட்டுச் சிறுகுரலில் ஓர் குழந்தையின் அழுகை தனது வரவை உலகில் பதிந்தது.

"இஞ்சபார்… உண்ட பிள்ளைய… கொழுக்கு மொழுக்கெண்டு கனமாத்தான் இருக்கிறார்". கிழட்டு மருத்துவிச்சியின் குரலில் பெருமிதம் தெளிவற்றுக் கிடந்தது. "என்ன பிள்ளயெண்டு படமெடுத்துப் பாத்திருப்பியல் தானே?… பொடியன் தான்… பால வடிவாக் குடு… அவனுக்கும் நல்லம்… உனக்கும் நல்லம்"

போகின்றபோக்கில் ஏனோ தானோ என்று சலிப்போடு பேசியதைப் போல மருத்துவிச்சியின் குரல் அவளுக்குக் கேட்டது.

"என்ட பிள்ளை…… என்ட மகன்…" இழந்த இரத்தம் எல்லாம் ஒரு சேர ஊற்றெடுத்து உடல் முழுவதும் சுழன்றோட… உத்வேகம் கொண்டு அவள் தனது குழந்தையை "என்ட பிள்ளை"என்று தன் மார்போடு இறுக்கினாள்.

"நான் என்ட கத்தலை நிப்பாட்டிப் போட்டன்"

"அமிர்தம் என் வாயினுள் சுரக்கும் போது அழுகை எதற்கு?"

அது ஒரு நீண்டதெரு...
கரையோரங்களிற் கல்லுப்பெயர்ந்து மழைநீரால் மண்ணரிக்கப்பட்டு அவலட்சணமாய் இருந்தாலும்...பயணம் செய்பவரின் பல வர்ணத் துப்பல்களால் சிவப்பும் மஞ்சளும் வேறு ஏதேதோ எல்லாம் நிறம் படிந்துகிடக்கும் தெரு.
தெருவோர அந்தங்களில் வீடுகளிலிருந்து தூக்கியெறியப்படும் குப்பைகள் யாவும் சேர்ந்து புழுத்துப் போன மணமும்...
புழுக்களும் சேர்ந்த குப்பைக் கிடங்கின் அருகே.......உறுமல்....

நிறங்கள் பல கொண்ட நாய்கள்...
சீழ் பிடித்த புண்களுடன்... மயிர் கழன்ற தோல்களுடன்.... நாற்றமடிக்கும் நாய்கள்...
எறியப்படும் புதிய குப்பைக்காய் சண்டையிட்டுக் கொண்டிருக்க... ஓரமொன்றில் சபிக்கப்பட்ட பெண் நாயொன்று சோணை பிடித்த குட்டி நாயொன்றைப் பெற்றுப் போட்டது... இறந்து பிறந்ததைப் போல் அசைவற்றுக் கிடந்தது அந்த நாய்க்குட்டி.... இருள் கவிந்தபின் ஓர் சிணுங்கலை மட்டும் அந்த நாய்க்குட்டி செய்தது.

மருத்துவச்சாலையிலிருந்து மூன்றாம் நாள் நான் வீடு வந்தேன். அம்மாவை அசையவிடாமல் பாட்டியும் சித்தியும் பிடித்து காரிலிருந்து கீழே இறக்கினார்கள். என்னைக் காவிச் செல்ல ஆயிரம் கைகள்... அங்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய சிலாகிப்பு "கண் அப்பரை மாதிரியே இருக்கு"... "காதுச் சுளியலைப் பாத்தியலே... தாத்தாவின்ற அதே சேப்"
யாரோ சொல்லச் சொல்ல பாட்டி சுவரில் சட்டமிட்டுப் பொட்டு வைத்திருந்த தாத்தாவின் படத்தை ஏக்கத்துடன் நோக்கினாள். பின் சிறு மூச்சொன்று விம்மியடங்க... முகம் திருப்தியாய் பொக்கைவாயால் என் கால்களை எச்சில் படுத்தினாள்.

"கொட்டாவி விடுறான்... பசிக்குது போலக் கிடக்கு... தம்பி இஞ்சவா...மகனக் கொண்டுபோய் மனிசீட்டக் குடு..." மீண்டும் கைமாறக் கதகதப்பான அணைப்பு... கணப்பொழுதில் அமிர்தம்... கண்களை இமை மூடக் கறுப்பிருட்டில் கனவுகள்....

விடியலில் சோணை பிடித்த குட்டிநாய் மெதுவாய் எழும்பியது. நடை தள்ளாட உறுதியின்றிப் போய் மலைக் குவியல் குப்பையில் விழுந்தது.

மீளமெதுவாய் எழும்பி நாக்கைத் தொங்கவிட்டு புழுப்பிடித்த பண்டங்களை எல்லாம் நக்கத் தொடங்கிற்று....
திடீரென அருகே உறுமல்... சோணை நாய் நக்கிய புழுப்பிடித்த பண்டங்களின் சொந்தக்காரநாய் சோணை நாயை சினமேறிப் பார்த்துக்கொண்டிருந்தது...

உறுமல்.... அனுங்கல்....

உறுமல்.... ஊளை....

உறுமல்... உறுமல்.....
குட்டி நாயின் சீவமரணப் போர்...
உயிர் வாழ்வதற்கான உணவுப் போர்.... அக் கணம் தொடங்கிற்று.

"இஞ்சபாரன்...முகத்தப்பாத்துப் பாத்து சிரிக்கறத... கொப்பர்... கொம்மாட முகமெல்லாம் பொடிக்கு விளங்குது தானே..."

"இஞ்சாருங்கோ...எங்க நிக்கிறியள்... இஞ்ச ஓடிவாங்கவன்... இவனப் பாருங்களன் குப்பிறத் திரும்பீட்டான்..." அம்மாவின் குரல் குதூகலக் காண்டா மணியாய் ஊரெங்கும் அச்சேதி பரப்பிற்று.

"அடிக்....அடீக்... இதென்ன புதுசா ஒரு குட்டி நாயொண்டு வாசல்ல வந்து நிக்குது... இப்பயே அதுக்குக் கழுத்துப் பக்கத்தில சிதல் வடியுது புண்ணால...."..... "அடிச்சுக் கலையுங்கோ..." "அடீக்...அடீக்" கல்லொன்று எழும்பி காற்றில் இலக்கின்றிப் பறந்தது. அந்தக் குட்டி நாய் மீண்டும் குப்பை மேட்டை நோக்கி ஓட்டமெடுத்தது.

"இஞ்சாருங்கோ...சாப்பாடு தீத்தேக்க கையக் கடிக்கிறான்..."
"ஓம் பல்லு முளைச்சிட்டுது"
குடையின் நடுவே நான் குந்தியிருந்தேன். உறவுகள் கூடி வீட்டு விறாந்தையை நிறைத்திருக்க... குடைமீது எதுவெதுவோ கொட்டப்பட்டது. எதுவுமே என் விரல்களுக்குள் அடங்காத வடிவங்கள்... ஒன்று மட்டும் பிடிபடவே நான் அதை எடுத்து வாய்க்குள் ஓட்டினேன்.

"அம்மாடி.... இப்பவே பொடியன் பென்சில எடுக்கிறான்...கடும் கெட்டிக்காரந்தான்...." யாரோ சொல்ல முத்தங்களை அள்ளித் தெளித்தார்கள் உறவுகள்.

மிஞ்சிப் போன கொத்துரொட்டிப் பறியொன்று குப்பை மேட்டில் வீசப்பட்டது. அந்தத் தெருவின் அந்தமொன்றிலுள்ள வீட்டில் பல்முளைத்த விழாவில் எறிபவற்றைச் சாப்பிடக் கூடியிருந்தன நாய்கள்.... குப்பையில் எறியப்பட்ட பறியின் முன்னே எஞ்சி நிற்கின்றது சபிக்கப்பட்ட சத்தியிழந்த பெண்நாயும் ...அதன் சோணை பிடித்தநாய்க் குட்டியும்....

உறுமல் ..... தக்கவைப்பதற்கான உறுமல்....

ஊளை..... நாக்குநுனியில் வழியும் எச்சில் துளிகளின் ஊளை...

நேருக்கு நேர் மோதவலுவற்ற நாயிரண்டும் உறுமிக் கொண்டே ஆளுக்கோர்பக்கமாய் ரொட்டிப் பையை இழுத்துப் பிய்த்தன... கிடைத்ததைக் கொண்டு ஓரங்களுக்குள் ஒதுங்கிக் கொண்டன.... கிடைக்காததையிட்டு ஊளையிட்டன.

"ஆ.... வெட்டுங்கோ...கேக்கைவெட்டி அப்பாக்குத் தீத்துங்கோ...எங்க...எங்க.... இந்தா... இந்தா...அச்சாக்குட்டி". அன்றும் வீட்டின் மூலையில் எறிபவற்றைச் சாப்பிட ஒன்றாகின நாய்கள்... கழுத்திற் சிதல் வடியும் புண் கொண்ட நாயொன்று தனது பங்கைப் பிரித்துச் செல்லும் வைராக்கியத்துடன் உறுமத் தொடங்கிற்று....

எனக்கான விழாக்கள் ஆண்டொன்றில் பலவந்தது. அரிசியில் எழுதிய ஒருநாள்.... ஆரம்பப் பாடசாலைக்கொருநாள்.... நிறக் காட்சட்டைக்கும் வெண்ணிறச் சேட்டுக்கும் இன்னுமொரு நாள்.... ஆண்டுகள் இறந்து அகவைகள் பிறக்க ஒன்று...

புலமைப்பரிசிற் பரீட்சைக் கொன்று.... பத்தாம் வகுப்புப் பெறுபேற்றுக் கொன்று...

விழாக்களின் போதெல்லாம் சிரித்தும் சந்தோசமாயும் இருந்த நான், காலம் சில உறவுகளின் பெயரை அழித்த போதெல்லாம் மட்டும் அழுதேன்...

நாய்களோ அவ்வனைத்து நாட்களிலும் எறியப்படுபவைக்காய் கடித்துக் குதறிக் கொண்டன...

அவர்கள் எனது கிராமத்தில் முகாமிட்டார்கள்...

அவர்கள் காக்கி உடை அணிந்திருந்தார்கள்...பச்சைநிறத் தொப்பி...புரியாதமொழி...கைகளிலோ கொலைக்கருவி....

அவர்களால் எனது பயணம் அன்று நிறுத்தப்பட்டது.... கிலி கால்களை நடுங்கச் செய்ய குதித்திறங்கினேன் சைக்கிளிலிருந்து....
"புரியாதமொழி"
"எங்கபோறாய்"....
"......."
"பையில என்ன"
"..............."
"எங்க இருக்கிறனி"
"........."
அருகில் அவர்கள் நெருங்க நாக்குக் குளறத் தொடங்கிற்று... என்ரபேர்..... நான் ஒரே பிள்ள..... அம்மா டீச்சர்...அப்பா வயச் செய்ரார்..... இஞ்ச பக்கத்தில தான் இருக்கிறன்.... சந்தியால திரும்பி நீலகேட்..... மூண்டாவது வீடு...கோயிலுக்கு முன்னுக்கு...." எனது வார்த்தைகள் தெளிவற்றுப் புலம்பலாய் விழுந்தது...
சந்தேகம் வலுத்தது காக்கிக்காரர்களுக்கு... கேள்விகள் அவர்களிடமிருந்து கொத்தாக விழுந்தன..
"எந்த ஸ்கூல்...? ஆர் டீச்சர்?... எத்தனை வயசு?... அவனுகள் வாறவங்களா? ஸ்கூலுக்கு... நீ என்ன கொண்டு போய்க் குடுக்கிறனி... காச்சட்டைக்க என்ன வச்சிருக்கிறாய்....?"
"பயப்பிடுறான்.... நாய்... இவனுக்குத் தொடர்பிருக்கு... இல்லாட்டிப் பயப்பிடமாட்டான்...."
"உனக்குச் சம்பந்தமிருக்கு....
இல்லையா.... ஓமா.....இல்லையா.... ஓமா......இல்லையா.... ஓமா...... ஓம்தானே.... ஓம்தானே....ஓம்தானே...."
கேள்விகளின் முடிவில் ஓங்கியறைந்து என்னை நிலத்தில் வீழ்த்தினார்கள்.

"ஆரும் என்றபிள்ளைக்கு அடிக்கக்கூடாது... சரியா"... அம்மாவின் குரல்
"அவன் நடந்து பழகுறான்... கீழ விழாமப் பாத்துக் கொள்ளுங்கோ.... அம்மம்மாவின் வேண்டுதல்..."
"குழந்தைக்கு ஏதும் நடந்துதெண்டா... வீட்டில இருக்கமாட்டீர்..... அப்பாவின் அதட்டல்கள் "

நிலத்தில் குப்பிற வீழ்ந்து கிடந்த அவனின் முகத்தைத் திருப்பினர் காக்கி உடையினர். பின் அவன் கண்ணின் ஊடே உண்மையைத் தேடினார்கள்...
மிருகம்..... அவர்கள் தேடியமிருகம்.... அவர்களுக்கென்னவோ அவன் கண்ணினுள்ளே அந்தமிருகம் தெரிந்தது..... அரச மரத்தையும்...அதனினத்தின் காக்கியுடையையும்... எதிர்க்கும் மிருக முகம்...

திரும்பிக்கிடந்த முகத்தின் மீது கொலைக்கருவிப் பிடியினால் ஓரேயடி...
"அம்மோவ்" பீறிட்டுப் பெருங்குரலில் ஓரழுகை...
உடைந்து தெறித்தன பற்கள்...

"கொட்டின கொழுக்கட்டய பிள்ளையாருக்கும் கொட்டினதால என்ர பிள்ளைக்கு முத்து முத்தாப் பல்லுகள்.... பாத்தியலே..." அம்மாவின் பெருமிதம்.....

எனக்கு உலகம் இருண்டது.... கால்கள் இரண்டையும் பற்றி யாரோ இருள் சூழ்ந்த முகாமினுள் இழுத்துச் சென்றார்கள்....
அம்மா அந்த முகாம் வாசலில் மண்ணுக்குள் பிரண்டு அழுகின்றாள்..
"ஐயோ... என்ர பிள்ளைய விட்டிருங்கோ... அவனுக்கொண்டும் தெரியாது... அவன நாங்கள் பொத்திப் பொத்தி வளத்தம்... ஐ....யோ..... என்....ர... பி...ள்...ளைய விட்....டிருங்கோ...."
அதே முகாமின் வாசலில் சத்தியிழந்து சபிக்கப்பட்டபெண் நாய் செத்துக் கிடந்தது..

அந்த இரவில்... எனது தெருவின் குப்பை மேட்டுக்கருகில் கைகள் பின்னால் கட்டப்பட்டு...... தலையில் சுடப்பட்டு நான் வீசியெறியப்பட்டேன்....

நாய்கள் எவையுமில்லை அங்கு...

கழுத்தில் சீழ் பிடித்து.... தோல் மயிர் எல்லாம் இழந்த சொறி நாயொன்று மட்டும் எனது உதிரத்தை நக்கியபடி அருகிலிருந்தது....

*15.04.2012*

# பரிநிர்வாணம்...

மான்களுக்கு அந்தக் குதிரையின் குழம்பொலி கேட்கத் தொடங்கிற்று...
மரண முகவரியின் அழைப்புக்கள் அவை.... சிலவேளை வேகமாயும்... சிலவேளை மெதுவாயும் மரணம் துரத்தத் துரத்த மான்கள் ஓடத் தொடங்கின...

முதலில் ஒரே திசையில் ஓடத் தொடங்கிய அவை... மெதுவாய்க் கலைந்து... கலைந்து... சிதைந்து... சிதறியோடத் தொடங்கிய கணத்தில் சரலெனப் புகுந்தது சாவின் அழைப்பு... அது வேட்டைக் குதிரையின் குழம்பொலி....
அதன் மீது அழகிய மானுடன் ஆயுதம் தரித்து... குதிரையின் கடிவாளம் கைவிடப்பட்டபோதும் குதிரை அதே வேகத்தில் சிதறிய மான் கூட்டமிடையே சரலெனப் புகுந்தது...
ஆயுதம் தரித்திருந்த அரசிளங்குமரன்... மரண பயங்கொண்டேகும் மான்களின் அவஸ்த்தையை அலாதியாய் அனுபவித்தான். எந்த மானைக் கொல்வதென்றே புரியவில்லை அவனுக்கு...
"கொல்வதென்பது எத்தனை சுகமானது... தலையின் மூளையைச் சிதைத்தால் ஒரு கணப்பொழுதில் சாவு... இதயத்தைத் துளைக்க அம்பேகினால் உதிரமோடிப் பின் சாவு... கணுக்காலிற் குறிவைத்து அம்பேகினால்... மான் ஓட முடியாமல் ஓடி... துள்ளித்.. தவழ்ந்து... வீழ்ந்து... தலையை இடதும் வலதுமாய் ஆட்டி.. அருகில் செல்ல.. மீள ஓட எத்தனித்து சில தப்படிகளில் விழுந்து... உயிர்ப்பிச்சை கேட்கும் கணத்தில் சட்டென நெற்றிப் பொட்டில் அடுத்த அம்பெய்ய... வலியுடன் சேர்ந்த சாவு...
சாவு... சாவு...
குதிரையில் பயணித்த அரசிளங்குமரனின் மனமெல்லாம் செந்நிற

வெறியேற கண்முன்னே தாயுடன் துள்ளியோடிய மான் குட்டியொன்றின் கணுக்காலைக் குறி வைத்தது வில்... விசுக்கெனப் பாய்ந்தது அம்பு... கணுக்காலைத் தைத்தது...
குட்டி மான் இடதும் வலதுமாய் தலையை ஆட்டி.. அருகில் வர சில தப்படிகள் வைத்து.. உயிர்ப்பிச்சை கேட்டது.... எனினும் மீளக் காற்றைக் கிழித்தது அந்த ஒலி..... “விஸ்ஸ்ஸ்... க்”
மன்னிப்பின்றி மானின் நெற்றி துளைத்துப் புகுந்தது இரண்டாம் அம்பு.

ஆனால் அக்கணத்தில் மானின் விழிகள்.... மூடாமல் அரசிளம் குமரனின் கண்களை ஊடுறுத்தது. அப்பார்வை அவன் இரத்த நரம்புகள் ஊடே ஏறி... கபால ஓட்டை உடைத்து மூளையை வெளிக்காற்றில் வீசியதாய்... அவ்வரசிளங் குமரன் உணர்ந்தான்...
மனமெங்கும் ஏறிய மரணச் செந்நிறம்.... இப்போ சிவப்பு நிற அட்டைகளாய் மாறி உடலெங்கும் அவனுக்குள் ஊறத் தொடங்கிற்று... குட்டி மானின் மரண அவஸ்த்தையின் துடிப்பு... அதன் வாழும் ஆசையின் மீதான விருப்பு... எழுந்து நடக்க முடியாதபடி அம்பு தைத்த காலை விடுத்து மூன்று காலில் உடம்பு காவி உயிர் மீளும் ஆசை... யாவும் ஒரு சேர அம் மானின் கண்களின் ஊடே வழிந்து வெளியேறிக் காற்றுடன் கலந்த கணங்கள்...
குதிரையை விடுத்துத் தடாலென இறங்கி தனது முழந்தாளை மண்ணில் குத்தி... மான் குட்டியின் முகத்தை உற்று நோக்கினான் அவன்... அம்பு தைத்துப் பிளந்த நெற்றிக்கருகில் மூடா இரு விழிகள்...
மானின் மரண வலி மெதுவாய் அவனுள் ஏறத் தொடங்கிற்று... சிவப்பு நிற அட்டைகள் ஒவ்வொன்றாய் அவன் உடம்பிலிருந்து கழன்று விழுந்தன...

அந்த வசு வண்டி வவுனியா நகரத்திலிருந்து மெதுவாய் கிளிநொச்சி நோக்கி நகரத் தொடங்கிற்று.
மாலினி சன்னலோர இருக்கையில் இருந்தாள். வலது பக்கத்தில் அம்மா... தனது இடது கையை மாலினியின் வலது கையுடன் பிணைத்துப் பிடித்திருந்தாள். வசு வண்டி ஓமந்தையின் இராணுவக் காவல் புள்ளியைத் தொட்டது. மெதுவாய் அம்மாவின் கை எனது கையை மேலும் அழுத்துவதை உணர முடிந்தது. அவ்வாறு அழுத்தும் போது பலவீனமான அவளது இதயத்துடிப்பு எனது கையின் மேற்பரப்பில் அடித்தது. நான் மெதுவாய் அம்மாவை திரும்பிப்

பார்த்தேன்.

"ஏனனை பயப்பிடுறாய்? "

இந்த கேள்வி அர்த்தமற்றது என்பது எனக்குத் தெரியும். . அம்மாவுக்கும் எனக்குமான கால வேறுபாடும், அவள் அண்ணாமாரின் கட்டுப்பாட்டுக்குள் வளர்ந்த வயதில் நான் ஆயுதத்துடன் களங்களுக்குள் திரிந்ததும்... எம்மிடையே பயம் சார்பாய் இரண்டு வேறான அர்த்தங்களைத் தந்திருந்தது.

"பயப்பிடாத அனே... நான் தடுப்பில இருந்து தானே வாறன்... பத்திரம் எல்லாம் கிடக்குத் தானே... பயப்பிடாத... "

அவளது உணர்வின் முன்னே என் வார்த்தைகள் மதிப்பற்றுப் போய்க் கிடந்தது.

"பறன கொட்டித"

(பழைய புலியா?)

கேட்ட இராணுவ வீரனின் முகத்திற் சலனம் ஏதுமில்லை. அவனுக்கு நான் ஒன்றும் புதிதில்லை போலும்... பத்திரங்களின் ஊடே விழிகள் ஓட... ஓட... அவனது முகத்தில் திருப்தி இழையோடியது...

எதுவுமே கூறாமல் பத்திரங்களைத் திருப்பித் தந்துவிட்டு நகர்ந்து விட்டான்.

எனது புதிய வாழ்வின் உயிர்த்துடிப்பை அந்தப் பத்திரங்களே கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அம்மா அவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

நூற்றி ஐம்பத்தைந்தாம் கட்டைச் சந்தியில் வசு விட்டு இறங்க இனம்புரியாத சோகமும்... சுதந்திரமான மூச்சொன்றும் வாயினூடே வெளியேறிற்று. கொஞ்சம் முன்னோக்கி நடந்து இடதுபுறம் திரும்பி கிறவல் ரோட்டில் இறங்க சுவாதியின் வீடு.... தெரியும் போது இரு வருட தடுப்பு வாழ்வின் வலி திடீரெனக் குறைவதாய்ப் பட்டது. மிக வேகமாக அவளின் வீடு நோக்கி நடக்க முயற்சிக்க...

"வேணாம் மகள்... சுவாதி வீட்ட போகாத" அம்மாவின் குரல் ஈனஸ்வரமானது.

"ஏன்"

"போகாத"

"அதான் ஏன் எண்டு கேக்கிறன்" எனது குரலில் லேசாக கோபம் ஏற அம்மாவை ஒரு விசித்திர மிருகமாய் நோக்கினேன், ஒரு கணம்....

எனினும் அவளது விழிகளின் ஊடே வழிந்த உணர்வு.... என் விழியினூடே ஓடி... மண்டைக்குள் கிறுகிறுத்தது.

சுவாதியின் வீடு நோக்கி மெதுவாய் நடக்கத் தொடங்கினேன். சுவாதியின் அம்மா முற்றத்தில் ஏதோ செய்து கொண்டிருந்தாள். வேலித் தடியின் இடைகளின் ஊடே நிச்சயமாக அவள் என்னை மதித்திருக்க வேண்டும். உடனேயே அவளின் விழிகளின் மறுதலிப்பு எனக்குத் தெளிவாய்ப் புரிந்தது.

சுவாதியின் படலையை அண்மித்தேன். நான்கு வருடங்களுக்கு முன் நாளாந்தம் என் கால் படும் படலை... அண்மித்த போது அன்னியமாய் உணர்வு...

சுவாதியின் அம்மா என்னை நேராக நோக்கினாள்...

"என்ன உணர்வு அது" அந்த விழிகளின் ஊடே தெறித்து விழுகிறது... கோபம்... வெறுப்பு... அனுதாபம்... அசதி... இவை எதுவுமேயில்லை. அந்த உணர்வுக்கு... அது வேறு ஏதோவொன்று...

என்னால் அந்தப் படலையைத் திறக்க முடியவில்லை... என் அம்மாவைப் பார்க்கிறேன்...

அம்மா எனது கைகளை மெதுவாகப் பற்றி அழுத்தி இழுத்துப் போனாள் எமது வீட்டுக்கு..

கிறவல் வீதி வழியே இடப்புறம் திரும்பி நடக்க எனது வீடு இருந்த இடம் தெரிந்தது. அங்கு வீடில்லை. இப்போ தெரிவதெல்லாம் வீடு போல ஒன்று...

அம்மா எனது கையை விடவேயில்லை. அப்பா ஓட முடியாமல் ஓடி வந்து அணைத்துக் கொண்டார். அவரை இறுக அணைத்துக் கொண்டு விம்மலாய்த் தொடங்கிய என் அழுகை... மனதின் ஆழத்திலிருந்த வலிகளை, விரக்திகளை, வடுக்களை ஒலி வடிவமாக்கி வாயினூடே வெளித்தள்ளியது.

காலைத் தேநீர் வெறுந்தேனீராய் இருந்தது ... "அம்மா தேத்தண்ணிக்குச் சீனி போட்டனியே?" அந்த அபத்தமான கேள்விக்கு பதிலாய் பார்வைகளே பரிமாறப்பட்டது. நான் அம்மாவைப் பார்க்க அம்மா அப்பாவைப் பார்த்தாள். அவர் நிலத்திலிருந்து சீனியை தோண்டுபவர் போல...

"இஞ்ஞாருங்கோ... போய் பாண் அர்றாத்தல் வாங்கியாங்கோ"

"அம்மா... நான் போறன்... "
"வேணாமடி"
"இல்லண... சந்திரன் அண்ணட கடைக்குத் தானே... நான் போட்டு வாறன்" பதிலை எதிர்பார்க்காமல் நான் எழும்பி கொடியில் கிடந்த அப்பாவின் சேட்டைப் போட்டு கையை மடித்தேன்.
"மாலினி... " அம்மா கிறீச்சிட்டாள்... மண்டையில் ஏதோ உறைத்தது. நான் சேட்டைக் கழற்றிக் கொடியில் போட்டேன். பல நிறப்பூக்களைக் கொண்ட சட்டையொன்றை உருவி எடுத்தேன். அச்சட்டை நீ பெண் என்று கூறுவது போல இருந்தது.

கண்டவுடன் சந்திரண்ணையின் முகத்தில் சந்தோசப் பூக்களை பார்க்க முடிந்தது. எனினும் தொக்கி நின்றது சோகம்.
"அர்றாத்தல் பாண் தாங்கோ... கொப்பில கணக்கெழுதட்டாம்... அம்மா சொன்னவ"
ஒரு முழு றாத்தலை சொப்பிங் பாக்கில் போட்டுக் கொண்டு கல்லாப்பெட்டியை விட்டு வெளியே வந்தார் சந்திரண்ண. கதைக்க வேண்டும் போலிருந்த அவரது செய்கைகளால் கடையினை விட்டு சிறிது வெளியே வந்து நின்றேன்.

"நீ வந்தோன்னயே சொல்லுறன் எண்டு யோசிக்காத... உன்ர வீட்டு நிலமை படுமோசம்.."
"கொப்பருங் கொம்மாவும் உன்ர வருகைய எதிர்பார்த்துத்தான் வாழுதுகள்"
" உன்னையப் பாக்க எனக்குப் பயமாக்கிடக்கு... நீ பாத்த ஊரில்ல இப்ப இது..."
"இது சாபம்... நாங்க அனுபவிக்கிறம்"
"உனக்கு சிலபேர் வேல தரமாட்டினம்.... ஏனென்டா நீ எங்களுக்காகப் போராடினனீ... "
"போன மாசந்தான் சுவாதி தூக்குப் போட்டுச் செத்தவள்"
"தடுப்பால வந்த, மனசு செத்த அவளிட்ட உடம்பு விலை எவ்வளவு எண்டு சில நாய்கள் கேட்டிட்டாங்கள்"

மான் குட்டியை தோள்களில் தாங்கிய படி அந்த மகானின் முன் மண்டியிட்டான் அரசிளங்குமரன்... மரணித்த மானின் உதிரம் வழிந்து பிணவாடை வீசிற்று.....

அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்த மகான் விழிகளை மெதுவாய்த் திறந்தார்.
மரணித்த போது மானின் விழிவழியே தெறித்து விழுந்த வலியினை அரச மகனின் விழிகளில் மகான் கண்டார்.
மானினை ஆரத் தழுவிக் கொண்டே கேவத் தொடங்கிய அரச மகனின் அதறல் அக் காட்டையே உழுக்கிற்று...
அதறல் அடங்க... மகான் பேசத்தொடங்கினார்.
"நீ விமோசனம் பெற்றாய் மகனே"
"இனி இரண்டாய் வாழ்... உடலால் அரச குமரனாய்... உள்ளத்தால் ஞானியாய் வாழ்... போ... போய் இரண்டாய் வாழ். உள்ளம் வேறாய்... உடல் வேறாய். ஆனால் உள்ளமே முக்கியம்... உடலல்ல"

ஒரு றாத்தல் பாணின் கனம் மாலினியின் கைகளில் பாரித்தது. விடுப்பின் பின்னான வாழ்வு மரணம் நோக்கிப் பயணிப்பது போல் அவளுக்குத் தெளிவாய்த் தெரிந்தது.
பாண் தொண்டையுள் சிக்கிக் கொண்டது... ஒன்றில் மரணம் அல்லது பசியுடனான வாழ்வு... அல்லது பசித்தவர்களுடனான வாழ்வு... அவள் அந்த மூன்று மிருகங்களும் ஒளிந்து நிற்கும் கானகத்திடையே ஆயுதமின்றித் தனித்து நின்றாள்.
பாண் தொண்டையில் புறைக்கேறியது.
"மாலினி... ஜீ.எஸ் வாறா"
"வாங்கோ ஜீ.எஸ்"
"ஓம்... சந்திரண்ணை என்னோட கதைச்சவர்... அதான் மாலினிக்கு ஒரு வேலை விசயமா கதைக்க வந்தனான்."
"ஒரு மாசம் பயிற்சிக்குப் போகோணும்... போகேக்க அம்மா அப்பவைப் பாக்கேலா... மாசம் முப்பதாயிரம் சம்பளம் வரும்... உனக்கும் விருப்பமெண்டா... ஆமில சேரலாம்"
கடைசி வார்த்தை... அந்தக் கடைசி வார்த்தை...
மாலினி சரலென எழுந்தாள்...
"வெளியே.... பே.......ா.... "
தாயும் தகப்பனும் திகைத்துப் போய் நின்றார்கள்... ஆனால் ஜீ.எஸ் விண்ணப்பப் படிவத்தை தானிருந்த கதிரையில் விட்டு விட்டு வெளியே சாவதானமாய் நடந்து போனார்...

அரை இறாத்தல் பாண் உண்ணப் படாமலேயே அந்தக் கொட்டிலில் கிடந்தது.

ஆறு நாட்களின் பின் அரசிளங்குமரன் மகானிடமே திரும்பி வந்தான்.
"ஐயா... இரண்டாய் வாழ்தல் முடியவே முடியவில்லை..." இரண்டாய் வாழ ஊரெல்லாம் பழிக்குதே... ஊர்ப் பழிச்சொல் கூட முக்கியமில்லை... என் மனமே எனைக் கொல்லுதே ஐயா... காட்டிலும் நாட்டிலும் தசை புணர்ந்த இவனுக்கு விடிவென்பதே இல்லையா.... ஐயா....!..."
விம்மல் தணிந்து... புலம்பல் ஓய... மகான் வாய் திறந்தார்.
"குழந்தாய்... ஊர்ப்பழி என்பது இறைவனின் கணக்கல்ல... மனமென்பதே முக்கியம்... உடலல்ல... காட்டிலும் வீட்டிலும் மான் தசை புணர்ந்தது உன் உடல்... மனமல்ல.... நீ உன் உடலையேன் மனமாய் எண்ணுகிறாய்... நீ மனத்தால் ஞானி... படைப்பால் மிருகம்... போ... போய் உன் படைப்பின் நோக்கத்தைச் செய்... உன் படைப்பே ஆயுதம் தரித்தலும் வேட்டையாடுதலும் தான்... போ... போய் அரச தொழில் செய்... ஆனால் ஞானியாய் வாழ்...

அப்பாவின் இருமல் ஒலி மாலினியை எழுப்பிற்று.
பனி அந்த அதிகாலையில் தறப்பாலின் ஊடே தடையின்றிப் புகுந்து கொண்டிருந்தது. நிலம் ஊறி படுக்கை விரிப்புக் கந்தல் துணிகள் ஈரமாகிக் கிடந்தன.
இறுதிப் போரின் போதான வாழ்வும், அதன் பின்னரான தடுப்பு வாழ்வும், இளவயதும் அவளுக்கு அகமும் புறமும் கனன்றாலும் நித்திரை கொள்ள கற்றுக் கொடுத்திருந்தன.
ஈர விறகில் அடுப்பு மூட்டப் போராடும் அம்மா நச்சரிப்பது தெளிவாய் விழுந்தது.
"உந்த இருமலக் கொஞ்சம் நிப்பாட்டுங்கோ, தண்ணி சுட்டோன்ன தேத்தண்ணி தருவந்தானே"
மாலினி ஒருக்களித்து எழும்பி முழங்கால்களை மடித்து கைகளால் இறுகக் கட்டிக் கொண்டு முழங்கால் முட்டியில் முகத்தைப் பதித்துக் கொண்டாள். வெறும் வயிறு சுருங்கிய போது பசி குறைந்தது போல அவள் உணர்ந்தாள்...

" முப்பதாயிரம்..."
"ஐயோ என்னால ஏலாது"

"முப்பதாயிரம்"
"நானொரு போராளி"

"முப்பதாயிரம்"
"எங்கட எதிரிகளோட நான் சேருவனா?... "

"முப்பதாயிரம்"
"என்னைப் பாத்து எல்லாரும் என்ன கதைப்பினம்"

"நீ இரண்டு நாளா சாப்பிடேல்ல..."
"ஏலாது"
"உனக்கு வேல தர மாட்டினம்"
"ஏலாது"

"நீ தூக்கில தான் தொங்கோணும்"

" அதுதான் என்னால ஏலா... ஏலாது... நான் தூக்கில தொங்க மாட்டன்.."
மாலினியின் உடம்பு சிலிர்த்தது.
"தற்கொடையே பிரயோசனமில்லை எண்டேக்க... தற்கொலை மட்டும் பிரயோசனமே...? மனசால நான் போராளி... உடம்பால நான் பெண். என்ர உடம்பு செய்ற எந்த வேலைக்கும் மனசுக்கும் சம்பந்தமில்ல... நான் வீட்டக் காப்பாத்தோணும்.... என்ட உடம்பால... "
அவள் விதிர்த்து எழுந்தாள்...
மாலினி எனும் மனப்போராளியின் உடல் இராணுவ சேவை விண்ணப்ப படிவத்தை நிரப்பத் தொடங்கியது.

அவளது வீட்டின் செத்தையில் அந்த மகானின் படம் செருகப்பட்டிருந்தது.

*15.09.2012*

- 17.02.2013 வரை தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட எந்தப் பெண் போராளியும் இராணுவ சேவையில் இணையவில்லை-

# அஞ்ஞாதவாசம்

சோம்பேறித் தனமாக விடிந்து போய் இருந்தது அன்றைய காலை. நேரம் 8.30 மணியைத் தொட்டும் சூரிய ஒளிக்கதிர்களை பூமிக்கு வரவிடாமல் இருள் சூழ்ந்த மேகங்கள் வானமெங்கும் விரவிக் கிடந்தன.

அந்த இராணுவ முகாமைச் சுற்றிய நகரம் என்னவோ சூழலுக்குப் பொருத்தமில்லாச் சுறுசுறுப்புடன் இயங்குவதாகவே சமனுக்குப்பட்டது. "சமன்" எனச் செல்லமாக அழைக்கப்படும் முதியான்சலாகே ரணவீர சமன்குமார ஒரு கொமாண்டோ வீரன். உறுதியான மனமும், விறைப்பான உடலும், உரமேறிய தசைநார்களும்... ஒரு இருபத்தியொரு வயதுடைய சாதாரண இளைஞனுக்குரிய எந்தவிதமான "பெண்ணியப்" பார்வைகளுமற்ற வீரன்.

அந்தக் காலை வேளையில் வழமையான உடற்பயிற்சிகளின் பின் போதுமான காலை உணவை தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிடும் இடம் நோக்கி நடந்து போகும் போது... யன்னல்கள் ஊடே தெரியும் நகரம் அவனது மண் வீட்டின் கதவு நிலைகளுக்கு கீழ் தமது வீட்டைக் கட்டிக் கொள்ளும் கறுப்பு எறும்புகளையும் சிறிய சிறிய மணித்துளிகளாக வெள்ளை நிற உணவை சிறிய வாயில் கௌவிக் கொண்டு தமது வீட்டை நோக்கி ஓடிச் செல்லும் அந்தக் கறுப்பு எறும்புகளின் சுறுசுறுப்பையும் நினைவுபடுத்திற்று.

"வீடு"...

வீடு என்னும் வார்த்தையே சமனின் கனவு இல்லத்தை அவன்முன் நிறுத்தும்... அந்தக் கனவு இல்லத்தில்... கூரை ஓடுகளாலும்... சுவர்கள் சீமெந்து கட்டிகளாலும், நிலம் சீமெந்துச் சிவப்பாலும் பூசப்பட்ட அவனது வீட்டில்... கனவு இல்லத்தில்.... சமனையும் சுமனாவதியையும் தவிர எவருமேயில்லை. சுமனாவதி அவனது தாய்...

ர.சமன்குமார தனது பதின்நான்கு வயதிலேயே ரணவீரவைக் கொன்றுவிடும் முடிவை எடுத்துவிட்டான். எனவே அவனது கனவு இல்லத்தின் வெள்ளை நிற மாலையிட்ட ரணவீரவின் படம் கூடக் கிடையாது.

பன்னிரண்டு வயதில் ஆரம்பமான சமனின் நரக வாழ்வின் மாற்றம் தந்த வலியின் சுவடுகள் உறுதியான மணங்கொண்ட அந்தக் கொமாண்டோ வீரனின் எண்ணக்கிளை எங்கும் புறையோடிக் கிடக்கின்றன.

அந்தப் பன்னிரண்டு வயதின் அதிகாலையொன்றும் இப்படித்தான் விடிந்திருந்தது.

"இது என்ன புதுப் பழக்கமாக் கிடக்கு"

சுமனாவதியின் குரலில் பயத்தின் காரணமாய் நடுக்கமும்... ஆற்ற முடியாத் துயரத்தின் சாயலாய் வார்த்தைகள் முழுதாய் வெளிவரவுமின்றிய கேள்வி... பின் அந்தக் குடிசை வீட்டில் சின்ன அதிர்வை ஏற்படுத்திற்று.

"உங்களத்தான் கேக்கிறன்... இது என்ன புதுசா ஒரு கன்ராவி"

ரணவீர சட்டை செய்வதாயில்லை.

தனது புதுப்பழக்கத்தின் தயார்படுத்தல்களில் அவன் ஏதோ ஒரு கர்மவீரனாய் இருந்தான்.

சிகரெட்டின் அடிக்கட்டையைக் கவனமாகப் பிடித்தபடி மிக வாகாய் முன்பக்க வெள்ளைப் பேப்பருள் சுற்றப்பட்டிருந்த புகையிலைத் துகள்களை மெதுவாக வெளியேற்றிக் கொண்டிருந்தான். அந்தப் புகைச்சுருட்டின் வெந்தோல் கசங்காமல் புகையிலைத் துகள்களை வெளியேற்றிய பின் வேறு ஏதோ துகள்களை அதனுள்ளே இட்டு அந்த வெஞ்சுருட்டைப் புகைத்த போது ஒவ்வொரு மூச்சிழுப்பிற்கும் கண்களை நன்றாக மூடி ஆழ்ந்து சுவாசித்து மெல்ல... மெல்ல ரணவீர மற்றோர் உலகிற்குள் புகப்... புக.... அந்த மண் வீட்டின் சுவரிற் சரிந்து நின்ற சுமனாவதியின் கண்ணீர்... சுவரில் வடிந்து மண்ணைக் கரைக்கத் தொடங்கிற்று...

வறுமையாய் இருந்தாலும் அருமையான அந்த இல்லம் அழியத் தொடங்கிற்று.

ரணவீர வெண்சுருட்டுக்களுக்காகவும் வேறு புகைப் பொருட்களுக்காகவும் தனது வருமானம் முழுவதையும் செலவிடத் தொடங்கிய நாளில் சுமனாவதி கூலி வேலைக்கு போகத் தொடங்கினாள். ரணவீர அப்படியொன்றும் பெரிய வேலை எதுவுமே செய்யவில்லை. மூட்டை தூக்கிதான். ஆனால் நேர்மையான தொழிலில் மிகக் கருத்துடைய தொழிலாளி. காலையில் வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சேட்டுமணிந்து தொழிலுக்கு போகும் ரணவீரவை மாலை வீடு வரும் போதும் அப்படியே பார்த்துப் பழகிய சமன்குமாரவிற்கு அப்பா என்றால் வெள்ளை என்று பதிந்து போயிருந்தது....

ஆனால் அந்த வெள்ளுடைகள் வீட்டின் ஊடே கட்டப்பட்ட துணிக்கொடியில் நிரந்தரமாக கிடக்கத் தொடங்கிய போது... சுமனாவதி தனது உழைப்பினை பாதுகாக்க போராட வேண்டியிருந்தது.

“காசு தா.... தா...”

“தா...”

“தா.....”

இந்த வினாக்களின் பின் எல்லாம் சுமனாவதியின் கன்னங்கள் பதம் பார்க்கப்படுவதையும்... அவளது தலை ஓட்டை விழுந்த வீட்டுச் சுவரின் ஓரங்களில் எல்லாம் மோதப்படுவதையும்... மேலும் நெளிக்கப்படும் குசினிப் பாத்திரங்களையும் சுவரின் ஓரத்தில் பல்லியாய் ஒட்டிக்கொண்டு விதிர்த்த கண்களுடன் சமன் பார்த்த காலங்களில் ரணவீரவின் பிம்பம் மெல்ல மெல்ல அவனுள் அசிங்கப்பட தொடங்கிற்று.

பாடசாலை விட்டுத் திரும்பி தாயற்ற வீட்டில் தனித்திருந்த நாளொன்றில் “சமன்.....” ரணவீரவின் குரல் கேட்டது.

“ஓம்... அப்..பா”

“லால் முதலாளிட்ட போய் சிகரெட் ஒண்டு வாங்கியா”

“காசு....”

“நீ முதலாளிட்ட போ... அவர் தருவார்”...

லால் கடையின் ஓரத்தில் சமன் போனதும்... அங்கே போத்தல்களில் பல வர்ண இனிப்புக்களையும், டொபிகளையும் பார்த்தபடி சமன் மெய் மறந்து போய்விட்டான்...

“சமன்...” லால் முதலாளியின் குரல் அவனை தடுமாறச் செய்தது.

லால் முதலாளியும் வெள்ளை சேட்டும் வெள்ளை சாரமும் அணிந்திருந்தார்.
"ஐயா... சிகரெட் ஒண்டு வாங்கியரச் சொன்னவர்" அவனது குரல் அவனுக்கே கேட்கவில்லை...
"இஞ்ச கிட்டவா சமன்.... " என்று முதலாளி வாஞ்சையுடன் சமனின் கையைப் பிடித்து இழுத்தார்.
"ஓம்... சிகரெட்டோ... தாரன் நான்"
"உனக்கு அந்த டொபி எல்லாம் விருப்பமோ.. சமனின் கண்கள் வெட்கங் கெட்ட தனமாக அவனது ஆசையை வெளிப்படுத்தி விட்டன...

லால் எழும்பி கைகளை போத்தலுக்குள் விட்டு சில இனிப்புகளை அள்ளிக்கொண்டு சமனை முழுவதுமாக மூடியபடி கடையின் அடுத்த பகுதிக்கு அழைத்துச் சென்றார்.
அந்தக்கடையில் வேலைசெய்யும் சிறுவன் சமனைப் பார்த்த பார்வையில் ஏதோ அர்த்தமிருந்தது...

லால் முதலாளி இனிப்புக்களை சமனின் இரண்டு கைகளிலும் கொடுத்தார். கை நிறைய இனிப்புக்கள்.... கையைத் திறந்தால் இனிப்புக்கள் தரையிற் கொட்டி விடும்... சமனின் கைகளிரண்டையும் இனிப்புக்கள் கட்டிப் போட்டுவிடத்.... தொடங்கியது லாலின் தொடுகை... ஒரு புழுவின் நகர்வாய்த் தொடங்கி.... ஒரு சிறிய அட்டையாய் மாறி... நீண்ட பாம்பாகி.... லாலின் தொடுகை.... நண்டுகளின் கால்களாய் மாறி அத் தொடுகை சமனின் அந்தரங்களில் நகர முற்பட.... சமன் கைகளை உதறிக்கொண்டு வீடு நோக்கி ஓடத்தொடங்கினான்...
"முதலாளி சிகரெட் தந்தவரா?" சமனிடமிருந்து வார்த்தைகள் வரவில்லை. ரணவீர தடாரென எழுந்து ஒரு சேட்டைப் போட்டுக்கொண்டு கடை நோக்கி வேகமாகச் சென்றான்.

சுமனாவதி வீடு நோக்கி வரும்போது வெளிக்குந்தில் ஒரு சிகரெட் பெட்டியையே கையில் ஏந்தியபடி தனது தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த ரணவீரவையும், வீட்டினுள்ளே வெள்ளைச் சாரத்தையும் சேட்டையும் நிலத்தில் போட்டு மிதித்துக் கொண்டிருந்த சமனையும் ஆச்சரியத்துடன் பார்த்தாள் அவள்...

அன்று அவளுக்கு அவற்றின் பொருள் விளங்கவில்லை...

"அப்பா என்னய விட்டிட்டுப் போகாதீங்கப்பா.... எனக்கு வேணாம் அப்பா.... பயமாக்கிடக்கு அப்பா"
சமனின் கெஞ்சல்களை விட லால் தரப்போகும் வெகுமதி ரணவீரவுக்குப் பெரிதாய்ப் போயிற்று... சமன் அந்த வீட்டில் தனித்து விடப்பட்ட சிறிது நேரத்தில்... லால் முதலாளி வந்திருந்தார். ரணவீர காணாமற் போயிருந்தான்...
புழுவின் நகர்வு... அது அட்டையாய் மாறிய போது... சமன் கையில் கிடைத்த எதனாலேயோ... லால் மீது ஓங்கி அடித்தான்.

"அம்மோவ்".... லாலின் கதறலின் சில மணி நேரத்தின் பின் தனது வீட்டை நோக்கி வந்த சுமனாவதியைப் பார்த்து சமன் கதறத் தொடங்கினான்...
"அம்மா".... அம்ம... அம்... மோய் "

கல்லுடைக்கும் கைகளிலிருந்த வலு அவ்வளவையும் சேர்த்துக் கொண்டு கத்தியொன்றை எடுத்துக் கொண்டு சுமனாவதி லாலின் வீடு நோக்கி ஓடத் தொடங்கினாள்...

திரும்பி வந்த போது சுமனாவதியின் உறுதியெல்லாம் வாடிப் போய் தளர்ந்த நடையுடன்... சிந்தனை ரேகைகள் சூழ... வந்த தாய்... தடாலென கத்தியை நிலத்தில் போட்டதை சமன் பார்த்துக் கொண்டேயிருந்தான். அந்தக் கத்தி இரத்தம் சுவைத்த அடையாளங்கள் ஏதுமில்லை....

இரவு முழுவதும் அவனது தலையை தடவியபடியே தாய் இருந்ததை சமன் உணர்ந்தான்.

மறு நாளிலிருந்து விடுதி வாழ்க்கை தொடங்கிற்று சமனுக்கு.... தடாலென நிலத்தில் வீழ்ந்த கத்தியின் பின்னணியில் பரிமாற்றப்பட்ட பணம் அவனது புது வாழ்வுக்கு.... விடுதி வாழ்வுக்கு.... உதவியது என்பதைத் தனது பதினெட்டு வயதில் தான் சமன் புரிந்து கொண்டான்.

வாரம் ஒரு முறை அவனைப் பார்க்க வரும் சுமனாவதியின் முகத்தில் ஏற்பட்ட சுருக்கங்கள்... அவளது உடலின் கூன்... குழிக்குள் தாழ்ந்த கண்கள்.... அவனது தனித்த உலகில் சுமனாவதிக்கு மட்டுமே இடத்தை உருவாக்கிற்று. அந்த இரவுகளில் அவன் பிணக்காட்டில் இரண்டு ஆண்களின் மண்டை ஓடுகளைத் தனது இரு கைகளிலும் தாங்கி

ஆடுவதாய் கனவுகள்... இரவுகள் தவறாமல் வரத் தொடங்கிவிட்டன. பதினெண் வயதின் போது தெருவெங்கும் ஒட்டப்பட்ட அந்த விளம்பரங்கள் அவனை ஈர்த்தன. மண்டையோடு... இரண்டு மனித எலும்புகள்...
அவன் கமாண்டோ படையணிக்குத் தேர்வானான்.

வெள்ளை நிறப் பலகையில் புள்ளியொன்றில் தொடங்கி ஒன்பது

கறுப்பு வட்டங்கள்....

"சமன்" "துப்பாக்கியால் குறிபார்"

"அந்தப் புள்ளிக்குச் சுடு"
சமன் தனது எம் - 4 கமாண்டோ துப்பாக்கியின் சுடு புள்ளியின் ஊடே...

"வெள்ளை நிறத்தில் கறுப்புப் புள்ளிகள்"
"வெள்ளையில் கறுப்பு"

"வெள்ளையில கறுப்பு"...

"கூடாது.... கூடாது... கூடவே கூடாது....." சமனது முதலாவது ரவையே சரியாக இலக்கைத் தாக்கிற்று...

"குட்" பயிற்சியாளர் கையைத் தட்டினார்.

சமன் தனது முதலாவது சூட்டிலேயே சூட்டுப்பலகையின் வட்டங்களின் நடுவே இருக்கும் புள்ளியைத் துளைத்தான்...

பயிற்சி முடிவில் சிறந்த குறிபார்த்துச் சுடும் வீரனுக்கான பரிசை வென்றான்.

"அன்பின் அம்மா... இதோட என்ட முதல் சம்பள காசுக் கட்டளையை அனுப்புறன்... இது உன்ட காசு... இனி வேலைக்குப் போமாட்டாய் என..."
"அன்புள்ள மகனுக்கு!..... காசு எடுத்தன்..... நான் வேலய விட்டுட்டன். ஆனா நீ வீட்டில இருந்து போய் இந்த மாதத்தோட எட்டு வருசமாகுது.... "
"எப்ப வருவாய்"

சமன் மனசுக்குள் சொல்லிக் கொள்வான் "என்ட எம் - 4 ஆல ரணவீரவ சுட்டாப் பிறகு.... லால் முதலாளியைச் சுட்ட பிறகு" வீட்ட வருவன் அம்மா... "

"வீடு"

சமன் தனது தலையைச் சிலிர்த்துக் கொண்டான். சாப்பாட்டிடத்திற்கு தட்டுடன் வந்த போது கட்டிட மொன்றின் கூரையின் மீது ஆயுதங்களுடன் சிலர் கத்துவதை தொலைக்காட்சியில் அவனது நண்பர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். .

"என்ன மச்சான்... பிரச்சனை"

"வெலிக்கடை ஜெயில்ல பிரச்சனையாம்"
சமனுக்கு மனம் ஏதோ சொல்லியது... "வேகமாச் சாப்பிடுறது நல்லம்"...

வேகமாகச் சாப்பிட்டு விட்டு நீர்க் கோப்பையைக் கையில் எடுக்க அழைப்போசை அலறத் தொடங்கிற்று...

சீருடை.... துப்பாக்கி... கத்தி... கைத்துப்பாக்கி... கையெறிகுண்டுகள் இரண்டு... தலைக்கவசம்... முகம் மூடி...
கமாண்டோப் படையணி தயாராகிவிட்டது...

தெளிவான கட்டளைகள் பிறந்தன...

"ஒவ்வொரு கமாண்டோவும் தனது உயிரையும் சகபாடியின் உயிரையும் காக்க வேண்டும்... ஆயுதம் தாங்காத எவரையும் சுடக் கூடாது. ஆனால் தாக்கும் எவரையும்..."

தெளிவான கட்டளைகள்

முதலில் கவசவாகனம் உள் நுழைந்தது... அதன் கவசத்தில் கமாண்டோக்கள் மெதுவாய் நுழைந்தார்கள் ....

அலறல்கள்...
சத்தங்கள்...
அனுங்கல்கள்.....
மனிதச் சிதைவுகள்....

கைதி ஒருவன் ஆயுதத்துடன் ஓடுவதை சமன் அவதானித்தான்.... தனக்கு எதிர்த்திசையில் சூட்டுச் சத்தங்கள் எவையுமில்லை என்பதை உறுதி செய்து கொண்டான்...
"கவர் மீ"
சமன் அந்த ஆயுதம் தரித்தவனை துரத்திக் கொண்டு ஓடினான்...

"வெண்நிறக் காட்சட்டை... வெண்நிறச் சேட்டு..."
அந்தக் கைதி தனது கையிலிருந்த ஆயுதத்தை தூக்கி எறிவதை சமன் கண்டான்.

"வெந்நிறக் காட்சட்டை... வெண்நிறச் சேட்டு... கறுப்பு உருவம்... வெந்நிறத்தில் கறுப்பு.... கூடாது... கூடாது... கூடவே கூடாது...."

அசுர வேகத்தில் ஓடிய சமன் அந்தக் கைதி சிறைக் கூண்டொன்றில் பதுங்குவதைக் கண்டான்.
பூட்சுக் காலால் கதவை உதைந்த வேகத்தில் அந்தக் கைதி பல்லி போல் எதிர்ப்புறச் சுவரில் அடிபட்டு விழுந்தான்.

சமன் பெருங்குரலில் கத்தத் தொடங்கினான்.

"வெள்ளை நிறத்தில் விழுந்த கறுப்பு நீ".... "கூடாது... கூடாது...."

"நீ தான் ரணவீர".....
"நீ தான் லால் முதலாளி..."
"நீ தான் நான் தேடும்... கறுப்புப் புள்ளிகள்...."
கூச்சலை முடிக்கும் முன்னமே அவனுடைய எந்திரத் துப்பாக்கி சட சடத்து சுவரின் காறைகள் எல்லாம் தெறித்து விழ்ந்தது.....

தன்னில் காயம் எதுவும் படாமலிருப்பதைப் பார்த்து அந்தக் கைதி வெடிச்சத்தம் ஓய்ந்த பின் சமனின் காலில் வீழ்ந்து அழுது கொண்டிருந்தான். "என்ர கடவுளே... என்ர கடவுளே"...

சுமனாவதி தொலைபேசியில் மகனை அழைத்தாள். "சமன் சுகமாயிருக்கிறியளோ"...

"ஓம் அம்மா".... "மோனே... உனக்குப் பிடிக்காது என்டாலும் சொல்ல வேண்டிய கடமையொன்டு இருக்கு.... அப்பர் செத்துட்டார்... "
"ஆர்...ரணவீரவோ?"

சிறிது நேரம் இருவரிடையேயும் அமைதி நிலவிற்று. சமன் மெதுவாக கனைத்தான்.... "நான் காரியமெல்லாம் செய்திட்டன்... மோனே".

தொலைபேசி அணைந்த போது சமன் வாய்விட்டு உரக்கச் சிரித்தான்... வாய் கிழியும் மட்டும்...

மேலதிகாரியிடம் வெள்ளை தாளொன்றை நீட்டினான். .
"என்ன சமன்?"
"எனக்கு லீவு வேணும் சேர், நான் வீட்ட போப் போறன்"

*20.12.2012*





ISBN - 978-955-44132-0-7

விலை - 200.00

Printed by: SS Digitals - 026 22 24 933